விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 300 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 29 புதன்கிழமை (15.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA(Hons)
OCTOBER INTAKE 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI, 239 Aresadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807

## கோப்பாய் பொலிஸ் நிலையக் காணி 30 வருட ஆக்கிரமிப்பு; இன்று கையளிப்பு

### யாழ்.நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியை அதன் உரிமையாளர்களிடம் கையளிக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ள நிலையில் இன்று புதன்கிழமை நீதிமன்றத்தின் மூலம் குறித்த காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் கோப்பாய் இராசபாதையில் அமைந்துள்ள கோப்பாய் பொலிஸ் நிலையம், கடந்த 30 வருடங்களாக பொலிஸாரின் கட்டுப்பாட்டிலும் பயன்பாட்டிலும் உள்ளது.

அந்தக் காணியின் உரிமையாளர்கள், காணியை தம்மிடம்

16ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டு ஆசை காட்டி கோடிகளில் பண மோசடி

### யாழில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி பலரிடம் கோடிக்கணக்கான பணத்தினைப் பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டின் கீழ், யாழ்ப்பாணம் - அரியாலைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் 4 முறைப்பாடுகளும் வவுனியாவில் 4 முறைப்

15ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரியாக

### கோணேஸ்வரன்



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் புதிய தலைமைப் பொலிஸ் பொறுப்பதி

15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் கைக்குண்டு மீட்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு மீடகப்பட்டுள்ளதாகப்

15ஆம் பக்கம் பார்க்க

# கணேமுல்ல சஞ்சீவ கொலை செவ்வந்தி உட்பட ஐவர் கைது

## நேபாளத்தில் அதிரடி

### யாழ்ப்பாணத் தம்பதியரும் அடங்குவர்



(கொழும்பு)

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ, புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தின் பிரதிவாதிகள் கூண்டில் வைத்து கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் அதற்கு உதவியதாகவும், உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்ட இஷாரா செவ்வந்தி உட்பட ஐந்து பேர் நேபாளத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். (15ஆம் பக்கம் பார்க்க)

## முன்பிணை கோரிய மனுஷ அடியோடு மறுத்தது மன்று

### இன்று அவர் கைதாகலாம்



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார இன்று (15) இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

### சர்வதேசப் பொலிஸாரின் உதவியுடன்

## பல மாத காலம் திட்டமிடப்பட்ட இரகசிய நடவடிக்கை வெற்றி

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வுட்லர்



(கொழும்பு)

"கணேமுல்ல சஞ்சீவ" என்பவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தியின் கைதானது பல மாத காலமாகத் திட்டமிடப்பட்ட இரகசிய நடவடிக்கையாகும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு. வுட்லர் தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவுக்கான படகுச் சேவை

### ஞாயிற்றுக்கிழமையிலும்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மக்களின் போக்குவரத்தினை இலகுபடுத்தும் நோக்கில் நெடுந்தீவுக்கான "வடதாரகை" மற்றும் "நெடுந்தாரகை" படகுச் சேவைகள் இனிமேல்

02ஆம் பக்கம் பார்க்க

### காலம் கடத்தும் மாகாண சபைத் தேர்தல்

## தமிழ்த் தேசியக் கட்சிகள் இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலம் நடத்தப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டுவரும் மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் அதற்குரிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் நோக்கிலும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள்

16ஆம் பக்கம் பார்க்க



## மின்சார கட்டணத்தில் மாற்றமில்லை

### இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

05ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ஆசிரியர்கள் 2 வது நாளாகப் போராட்டம்



ஆசிரியர் இடமாற்ற கொள்கையை சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறும், கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகக் கஷ்டப் பிரதேசம் மற்றும் அதிகஷ்டப் பிரதேசங்களில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கான இடம் மாற்றங்கள் சரியான முறையில் வகுக்கப்படவில்லை எனவும்கூறி வட மாகாண ஆசிரியர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் வட மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க் கிழமை இரண்டாவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களை பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் நேரில் சென்று சந்தித்து ஆசிரியர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டனர்.

ஆசிரியர்களால் முன் வைக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து தாம் வடமாகாண ஆளுநருடன் பேசித் தீர்வு பெற்றுத் தருவதாக ஆசிரியர்களுக்கு உறுதி அளித்தனர். (ந-7,33)

# வவு. குருமன்காட்டுச் சந்தியிலுள்ள உணவகங்களில் திடீர் சோதனை

## பழுதடைந்த கோழி இறைச்சி பறிமுதல்

(வவுனியா)

வவுனியா குருமன் காட்டுச் சந்தியிலுள்ள உணவகங்களில் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுத் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

முன்னதாக குறித்த பகுதியில் இயங்கிவரும் உணவகம் ஒன்றில் நேற்றுமுன்தினம்கொள்வனவு செய்யப்பட்ட கோழி இறைச்சியில் புழுக்கள் இருந்துள்ளமை தொடர்பாக வவுனியா மாநகர சபைக்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

அதற்கமைய நேற்றுக் காலை மாநகரசபையின் பிரதி முதல்வர் ப.கார்த்தீபன், உறுப்பினர் சிறிஅருணன் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்திருந்ததுடன் அங்கிருந்த உணவகங்கள் மீது திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது உணவகம் ஒன்றில் சுகாதார சீர்கேடான முறையில், உண்பதற்கு ஒவ்வாத கோழி இறைச்சி மற்றும் உணவுப்பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து குறித்த உணவுப்பொருட்கள் சுகாதாரப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அந்த உணவகம் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் சுகாதார நடைமுறைகளை பேணாமல் உணவகங்களில் பணி யாற்றும் ஊழியர்கள் தொடர்பாகவும் இதன் போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## காணாமலாக்கப்பட்ட மகனுக்காக

# காத்திருந்த மற்றுமொரு தாயும் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், அளவெட்டி தெற்கில் 2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணம் கல்முனைப் பகுதியில் காணாமல் போன மகனை 30 வருடங்களாகத் தேடி வந்த் தாய் ஒருவர், தனது வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அளவெட்டி தெற்கு, மலைவேம்படியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான பாலச்சந்திரன் உமாதேவி (வயது- 74) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் மரண விசாரணைகளை மேற்கொண்டதோடு சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பணிப்புரை விடுத்தார். தெல்லிப்பளை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(ந-7,60)

# யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நூல்கள் காட்சிப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் உசாத்துணை மற்றும் விசேட சேர்க்கை முகப்புப் பகுதிகளில் நாளை (16) மற்றும் நாளை மறுதினம்(17) காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை சேமமடு புத்தக சபையினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒரு தொகை நூல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அதேவேளை இன்றைய இளம் தலைமுறையினருக்கான வாசிப்பு விழிப்புணர்வை ஊட்டுவதற்கான நூல்களை அறிமுகம் செய்தல் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (ந-7)

# Invitation For Bids (IFB)

## Democratic Socialist Republic of Sri Lanka
## Nallur Pradeshiya Sabha, Kokuvil. Northern Province
## Fund : Council

**Bidding Documents for Procurement of Supplying Installation Baler Machine**

1. **The Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Nallur Pradeshiya Sabha, Kokuvil,** Northern Province, invites sealed bids from eligible and qualified bidders for the Procurement of Coloured waste Bins, Compost Bins & Glass Cupboards as in table below **and all bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. Interested eligible bidders may obtain further information on public working days between **09:00** hrs and **15:00** hrs from **15th October 2025 to 28th October 2025** from **Chairman, Nallur Pradeshiya Sabha, Kokuvil** and inspect the bidding documents at the same place on the above time.
   TP : **021 222 2700**, Email : ***npsnallur@gmail.com***
4. Qualification requirements are include possessing the minimum 2 years experience in selling and having Island wide maintenance in the particular brand and field. Additional details are provided in the bidding document.
5. A complete set of Bidding Document is English language may be purchased by interested bidders on submission of a written application to the address **Chairman, Nallur Pradeshiya Sabha-Kokuvil** from **15th October 2025 until 28th October2025 from 09.00 hrs to 15.30 hrs** on public working days and upon payment of non-refundable fee of Rs 2 000.00 (Including all Taxes). The method of payment should be by cash.
6. Complete Bids must be delivered to the address below in two copies as original and the duplicate. The original and duplicate should be enclosed separately and mark "Original" and "Duplicate" respectively in sealed envelopes. Both envelopes should be marked the **"Bid number"** on top left-hand corner of the envelop. Complete Bids should be delivered to **Chairman, Divisional Procurement Committee, Nallur Pradeshiya Sabha, Kokuvil** on or before **29th October 2025 at 11.00 hrs.** Electronic bidding will not be permitted. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person.
7. The Pre-Bid Meeting will be held at **Nallur Pradeshiya Sabha-Kokuvil** on **21st October 2025** at 14.00 hrs, Interested Bidders May Participate in this Meeting their own expenses.
8. The Bid shall be valid up to 63 days after the deadline for Bid Submission. All bids shall be accompanied by Bid Security as stated in the Table above

| Ser. No | Name of Item | Bid No | Period of Contract | Bid validity period from date of opening | Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount | Required period |
| 1 | Supplying and Installation of **Baler Machine** | NP/14/41(10)/ACC/ Baler Machine / 2025 | 01 Month | 63 Days | 20,000.00 | 28.01.2026 |

Chairman,
Divisional Procurement Committee,
Nallur Pradeshiya Sabha,
Kokkuvil.

(C-310) 15.10.2025

# நெடுந்தீவு...

ஞாயிற்றுக்கிழமைகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளன.

நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் படகு திருத்தப் பணிகளுக்காக அனுப்பப்பட்டுள்ள நிலையில், மக்களின் போக்குவரத்துக் கோரிக்கையை ஏற்று யாழ்ப்பாண மாவட்ட போக்குவரத்து தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பிரதீபன் விடுத்த கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, நெடுந்தீவில் இருந்து காலை 6.30 மணிக்கு புறப்படும் படகு காலை 7.30 மணிக்கு குறிகட்டுவானை சென்றடையும். குறிகட்டுவானில் இருந்து மீண்டும் காலை 7.30 மணிக்கு நெடுந்தீவு நோக்கிப் புறப்படும்.

அதேபோல், பிற்பகல் 3.30 மணிக்கு நெடுந்தீவிலிருந்து புறப்பட்டு, மீண்டும் குறிகாட்டுவானிலிருந்து பிற்பகல் 4.30 மணிக்கு நெடுந்தீவுக்குப் புறப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், செயற்குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க.இளங்குமரன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் யொ.குறுஸ், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பெருந்தெருக்கள் துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் நிரோசன் ரட்ணாயக்க அவர்களது பிரத்தியேக இணைப்பாளர் ஶ்ரீவர்னன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ந-7,33)


கல்யாணி நகை மாளிகை

வங்கியில் அடைவு வைத்த தங்க நகைகளை மீட்டு மிகுதி பணம் வழங்கப்படும்.

(C-4105)

077 784 0379

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின்
# "சங்கமம்" ஊழியர் தின விழா -15.10.2025

## ஊழியர் கௌரவிப்பு நிகழ்வும் ஒன்றுகூடலும்

### துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாய் தன் பொன் அகவை நிறைவில் பூரித்து நிற்கும் இவ்வேளையில், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஊழியர் கௌரவிப்பு மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி வரைவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஊழியர் சங்கம் ஆண்டு தோறும் கொண்டாடும் ஊழியர் கௌரவிப்பு மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வை, இந்த ஆண்டும் சிறப்பாகக் கொண்டாடுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறிகிறேன். இந்த அர்த்தமிக்க நாளில் பல்கலைக்கழகத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் என் இதயம் கனிந்த வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுப் பாதையில் ஊழியர் சங்கத்தின் வகிபாகம் முக்கியமானதொன்றாகும். பல்கலைக்கழகம் என்ற கல்வி நிறுவனத்தின் உறுதியான தூண்களாக விளங்குபவர்கள் அதன் ஊழியர்களே. பல்கலைக்கழகமொன்றின் கல்வி, ஆராய்ச்சி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும் சிறப்பாக நடைபெறுவதற்கு அதன் பின்னால் அர்ப்பணிப்புடன் உழைக்கும் ஊழியர்களின் பங்களிப்பு மிகப் பெரியது. கல்வி, நிர்வாகம், பராமரிப்பு சேவைகள், மாணவர் நலனோம்பு, மற்றும் ஏனைய அனைத்துத் துறைகளிலுமுள்ள ஊழியர்கள் அனைவரும் தங்கள் கடமைகளைச் சிரத்தையுடனும், ஒழுக்கத்துடனும், அர்ப்பணிப்புடனும் ஆற்றி வருவது எமது பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும், ஒத்துழைப்பும், ஒற்றுமையும் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு சாதனையிலும் பிரதிபலிக்கிறது.

தொழில்முறைப் பொறுப்புணர்வு, மனித நேயம் மற்றும் கூட்டாகச் செயற்படும் ஆற்றல் என்பன கல்வி நிறுவனங்களின் வலிமையான அடித்தளமாக விளங்குகின்றன. இவ்வாறான பண்புகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர்கள் அனைவரும் உண்மையிலேயே பாராட்டத்தக்கவர்கள். இந்த ஊழியர் கௌரவிப்பு மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வு உங்கள் ஒத்துழைப்பையும் உற்சாகத்தையும் மேலும் வலுப்படுத்தி, பல்கலைக்கழகத்தின் இலக்குகளை அடைவதற்கான புதிய உத்வேகத்தை ஏற்படுத்தும் நாளாக அமையட்டும் என வாழ்த்துகிறேன்.

சங்கத்தின் மகுட வாசகமாக இடம்பெற்றிருக்கும் "ஒன்றுபட்டு நிற்போம்" என்ற கோசத்தின் கீழ் அனைவரும் ஒற்றுமையாக - பல்கலைக்கழகத் தாயின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் உழைக்க எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் பெருங்கருணை துணைநிற்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

**பேராசிரியர். சி. சிறிசற்குணராஜா,**
**துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### பதிவாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தனது ஆண்டு விழாவை - "சங்கமம் 2025" இவ்வாண்டும் சிறப்பாக நடத்துவதில் மனமார்ந்த மகிழ்ச்சி அடைகிறேன். பல்கலைக்கழக ஊழியர்களின் நலன்களுக்கும், உரிமை பாதுகாப்பிற்கும் மட்டுமல்லாமல், ஒற்றுமை, நல்லிணக்கம், சமூகப் பொறுப்பு ஆகியவற்றிற்கும் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் பெருமளவு பங்களித்து வந்துள்ளது. இந்நிகழ்வு, அந்த ஒற்றுமையின் ஒரு சிறப்பான வெளிப்பாடாகும். இந்த விழாவில், ஓய்வுபெற்ற பணியாளர்களும், 25 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிய பணியாளர்களும், தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் வெற்றி பெற்ற பிள்ளைகளும், விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கியோரும் கௌரவிக்கப்படுவது, சங்கத்தின் உயர்ந்த பண்புகளையும், நன்றியுணர்வையும் வெளிப்படுத்துகிறது.

திருக்குறள் கூறுகிறது:
"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்தும் செயல்." (குறள் 516)

எமது ஊழியர்கள் தங்கள் அர்ப்பணிப்பாலும் உழைப்பாலும் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியை தினசரி உறுதிசெய்து வருகின்றனர் என்பதற்கான சான்றிதழாக இந்நிகழ்வு திகழ்கிறது. இவ்வாண்டு எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது 50 ஆவது ஆண்டு பயணத்தை, பொன்விழாவை கொண்டாடுகிறது என்பது மற்றொரு பெருமை. கடந்த அரைநூற்றாண்டு காலமாக கல்வி, ஆராய்ச்சி, சமூக முன்னேற்றம் ஆகிய துறைகளில் எமது பல்கலைக் கழகம் வடமாநில மக்களின் பெருமையாக இருந்து வந்துள்ளது.

இதன் பின்னணியில், ஊழியர்களின் உழைப்பும் அர்ப்பணிப்பும் அடித்தளமாக உள்ளன. பாரதியார் பாடியுள்ளார்:
"நம்மை ஒன்று சேர்க்க நம்மிடையே காதல் வேண்டும்
நம்மை உயரச் செய்ய நம்மிடையே ஒற்றுமை வேண்டும்."

அந்த ஒற்றுமையே எமது ஊழியர் சங்கத்தின் உயிர் மூச்சாகவும், பல்கலைக்கழகத்தின் பெருமையாகவும் திகழ்கிறது. உங்கள் சங்கத்தின் "சங்கமம் 2025" விழா நன்றியுணர்வும், ஊக்கமும், ஒற்றுமையும் நிறைந்த சிறப்பான நிகழ்வாக அமைய வேண்டும் என மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். "ஒற்றுமை என்பது சங்கத்தின் பலம் அர்ப்பணிப்பு என்பது பல்கலைக்கழகத்தின் பெருமை." இந்த பலமும் பெருமையும் என்றும் நிலைத்திருக்கட்டும்! இணைந்த கைகளால் வாழ்த்தும்,

**வி. காண்டீபன்,**
**பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

### பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவரின் செய்தி



எமது ஊழியர்கள் தம் நிறுவனத்திற்காக உழைத்து வெள்ளி விழாக்காணும் இத்தருணத்தில் கார்ள்மார்க்ஸின் அந்நியப்படுத்தல் எனும் தத்துவக் கருத்தில் குறிப்பிட்டது போன்று (Economic and Philosophic Manuscripts of 1844) எமது அங்கத்தவர்களும் இந்நிறுவனத்தின் ஓர் அங்கமென எண்ணாத மனநிலை எமது நிர்வாகத்தில் காணப்பட்டாலும், நிர்வாக வளர்ச்சிக்கு தமது பாரிய உழைப்பை வழங்கி இருப்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும். இவர்களுடைய பணி, உடல், உள, ஆரோக்கியம் மேலும் சிறப்புற சங்கம் சார்பாக வாழ்த்துகிறோம்.


ஓய்வுபெறும் பெரும்பாலானவர்கள் தமது இளமைக் காலத்தை முழுவதுமாக எமது பல்கலைக்கழக முன்னேற்றத்துக்காக அர்ப்பணித்துள்ளார்கள் என்பதை பெருமையுடன் தெரிவிக்கிறோம். எமது சங்கம் இவ்வாறு நெஞ்சை நிமிர்த்தி ஒழுக்கத்துடன் உண்மைக்கும், எமது சமூகத்திற்கும் குரல் கொடுக்கும் அமைப்பாகத் திகழவும் நிறுவனத்திற்கு கெடுதி இழைப்பவர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருப்பதற்கும் காரணமாக இருந்த எமது மூத்த தலைவர்களையும், வழிகாட்டிகளையும் ஊழியர் சங்கம் சார்பாக வாழ்த்துவதில் பெருமிதம் அடைகிறோம். இன்றைய 'இந்த உலகு நமக்கு மட்டுமல்ல எமது எதிர்காலத்துக்குமானது' என உலகு கூறும் அதே உண்மையை என்றோ மெய்ப்பிக்கும் விதத்தில் புலமைப் பரிசில் சித்தியெய்திய எம் உறுப்பினர்களின் பிள்ளைகளை வாழ்த்தி உற்சாகப்படுத்தி கௌரவித்து வருகின்றோம். அவ்வகையில் அவர்கள் மென்மேலும் கல்வியுடன் ஞானத்தையும் பெற்று வளர வாழ்த்துகிறோம். அத்தோடு அவர்களது வளர்ச்சிக்கு எமது சங்கம் தோள் கொடுக்கும் என உறுதியளித்து வாழ்த்துகிறோம்.

**பொ. தை. ய. யசோதன்,**
**தலைவர், பல்கலைக்கழக ஊழியர் சங்கம்.**


### 25 வருட பல்கலைக்கழக சேவையை பூர்த்திசெய்து கௌரவிக்கப்படும் அங்கத்தவர்கள்

| இல. | பெயர் | 25 வருடங்கள் பூர்த்தி செய்த திகதி |
|---|---|---|
| 1 | திருமதி. பி. தயாளினி | 01.08.2024 |
| 2 | திரு. கா. சத்தியகுமார் | 01.08.2024 |
| 3 | திரு. மு. குணசீலன் | 01.08.2024 |
| 4 | அமரர். இ. ராஜ்குமார் | 01.08.2024 |
| 5 | திரு. க. குணபாலன் | 01.08.2024 |
| 6 | திரு. ந. பார்த்தீபன் | 01.08.2024 |
| 7 | திரு. த. உதயராஜ் | 01.08.2024 |
| 8 | திரு. தெ. பிறேமசந்திரன் | 01.08.2024 |
| 9 | திரு. பா. உருத்திரகுமார் | 01.08.2024 |
| 10 | திரு. வ. ரவிக்குமார் | 01.08.2024 |
| 11 | திரு. ப. றொபேட் பெர்ணான்டோ | 01.08.2024 |
| 12 | திரு. ம. நடராஜசிங்கம் | 01.08.2024 |
| 13 | திரு. வ. ஆனந்தகுமார் | 01.08.2024 |
| 14 | திரு. பொ. உதயகுமார் | 01.08.2024 |
| 15 | திரு. ந. சிவலிங்கம் | 01.08.2024 |
| 16 | திரு. சு. இராஜேஸ்வரன் | 01.08.2024 |
| 17 | திரு. ம. ராஜ்குமார் | 01.08.2024 |
| 18 | திரு. க. ஜெயக்குமார் | 02.08.2024 |
| 19 | திரு. ம. மஜீந்திரன் | 02.08.2024 |
| 20 | திரு. பா. ராகுலன் | 02.08.2024 |
| 21 | திரு. செ. சதீசன் | 02.08.2024 |
| 22 | திரு. க. சசிக்குமார் | 02.08.2024 |
| 23 | திரு. அ. சசிரூபன் | 09.08.2024 |
| 24 | திரு. சி. வள்ளுவதாசன் | 16.09.2024 |
| 25 | திரு. ப. புஸ்பகுமார் | 01.11.2024 |
| 26 | திரு. சொ. மால்மருகன் | 01.11.2024 |
| 27 | திரு. ஐ. தர்மராசா | 01.11.2024 |
| 28 | திரு. மா. சிறீதரன் | 01.11.2024 |
| 29 | திரு. சு. ஹரிஹரன் | 01.11.2024 |
| 30 | திரு. க. விஜயகுமார் | 01.11.2024 |
| 31 | திரு. ப. பத்மராஜ் | 01.04.2025 |
| 32 | செல்வி. பா. நித்யா | 05.04.2025 |
| 33 | திரு. ச. சசிகுமார் | 03.07.2025 |
| 34 | திருமதி. க. நளினி | 17.07.2025 |

### பல்கலைக்கழகத்தில் சேவை செய்து ஓய்வு பெற்ற அங்கத்தவர்கள் (01.04.2024 இலிருந்து 15.10.2025 வரை)


திரு. க. கேதீஸ்வரன் (01.05.2024)


திரு. நெ. சபானந்தர் (22.05.2024)


திரு. மு. விக்னேஸ்வரன் (28.07.2024)


திரு. சி. தங்கராசா (02.08.2024)


திரு. அ. இலக்ஸ்மன் (29.08.2024)


திரு. பா. சயந்தன் (01.09.2024)


செல்வி. மு. லலிதாமினி (11.09.2024)


அமரர். வே. தர்மகுலசிங்கம் (09.11.2024)



திரு. ந. சர்வானந்தசிவம் (04.12.2024)



திரு. சி. கலாராஜ் (01.01.2025)



திரு. அ. பாஸ்கரன் (14.01.2025)


திரு. செ. செல்வராசா (07.02.2025)



திரு. ந. தனேஸ்வரன் (29.04.2025)


திரு. இ. சிவகுமார் (02.05.2025)


திரு. அ. துரைசிங்கம் (12.06.2025)


திரு. ஜ. சுரேஸ்குமார் (01.07.2025)


திரு. ம. ராஜ்குமார் (02.08.2025)


திரு. சி. கைலயங்கிரிவாசர் (20.09.2025)

### ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து 15.10.2025 அன்று கௌரவிக்கப்படும் அங்கத்தவர்களின் பிள்ளைகள் 2024, 2025

| இல | அங்கத்தவர் பெயர் | பிள்ளையின் பெயர் |
|---|---|---|
| 1. | திருமதி. அ. தவமதி | செல்வன். அ. சாய்அர்ச்சயன் |
| 2. | திருமதி. கோ. அஜந்தா | செல்வன். கோ. ரிகர்க்ஷன் |
| 3. | திரு. ந. ஜெயக்குமார் | செல்வி. ஜெ. லயக்சயா |
| 4. | திரு. ச. பிரசாந்தன் | செல்வன். பி. சாகித்தியன் |
| 5. | திரு. ம. நடனதேவன் | செல்வி. ந. தக்ஷ்மி |
| 6. | திரு. ந. தயாபரன் | செல்வி. த. யவிக்ஷனா |
| 7. | திரு. ம. சிறிகுமாரன் | செல்வி. சி. தர்மினா |
| 8. | திரு. ரெ. லிங்கராஜன் | செல்வி. லி. கம்சிகா |
| 9. | திரு ச. ஷதுர்ஷன் | செல்வன் ஷ. நிலாஷன் |
| 10. | திரு. த. சிவனேசன் | செல்வன் சி. ஆதர்சனன் |

**பல்கலைக்கழக ஊழியர் சங்கம்**

(5657)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசியமட்ட உயரம் பாய்தலில் மன்னார் மாணவிக்குத் தங்கம்




அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட உயரம்பாய்தல் போட்டியில் மன்னார் சென். பற்றிமா மத்திய மகா வித்தியாலய மாணவி டபிள்யூ. வில்ஷியா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 14 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மன்னார் சென்.பற்றிமா மத்திய மகாவித்தியாலய மாணவி டபிள்யூ. வில்ஷியா 1.56 மீற்றர் உயரம் பாய்ந்துதங்கப்பதக்க த்தைக் கைப்பற்றியுள்ளார். (3)

## தேசியமட்ட கோலூன்றிப் பாய்தல் தங்கம், வெள்ளி, வெண்கலம் வென்ற யாழ். மாணவிகள்

கொழும்பு தியகம மகிந்தராஜபக்ச விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் 38 ஆவது அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவின் மெய்வல்லுநர் போட்டிகளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வட மாகாண பாடசாலைகள் முழுமையான ஆதிக்கம் செலுத்தி தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைச் சுவீகரித்தன.

இப் போட்டியில் அருணோதயக் கல்லூரி மாணவி எஸ்.நிருஷிகா 3.80 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டார்.

அத்துடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி பி. அபிசாலினி 3. 60 மீற்றர் உயரம் பாய்ந்து



எஸ்.நிருஷிகா

வெள்ளிப் பதக்கத்தையும், பாசையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலய மாணவி என். ஆன்மேரி மற்றும் விக்டோரியா கல்லூரி மாணவி வை. நிதுஷா ஆகிய இருவரும் 2.80 மீற்றர் சம உயரத்தைத் தாவி வெண்கலப் பதங்கங்களையும் வென்றமை குறிப்பிடத்தக்கது. (3)

## அதிக டெஸ்ட் விக்கெட்டுக்கள்; முதலிடத்தில் முகமது சிராஜ்

இந்தியா- மேற்கிந்திய தீவு அணிகள் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி இந்திய அணித் தொடரை 2:0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

இந்நிலையில் இந்தத் தொடரில் சிராஜ் முதல் டெஸ்டில் 7 விக்கெட்டும் 2ஆவது டெஸ்டில் 3 விக்கெட்டும் வீழ்த்தியுள்ளார்.

இதன்மூலம் 37 விக்கெட்டுக்களை வீழ்த்தி இந்த ஆண்டில் டெஸ்டில் அதிக விக்கெட்டுகளை கைப்பற்றிய வீரரானார். இவருக்கு அடுத்தபடியாக ஜிம்பாப்வே அணியைச் சேர்ந்த முசரபானி 36 விக்கெட்டுடன் 2 ஆவது இடத்தில் உள்ளார். அதனைத் தொடர்ந்து ஸ்டார்க் (29), நாதன் லயன் (24), ஜோமல்




வாரிகன் (23) என அதற்கு அடுத்த இடத்தில் உள்ளனர். (3)

## கில் தலைமையில் முதல் முறையாக டெஸ்ட் தொடரை வென்ற இந்தியா!




டெல்லி அருண் ஜெட்லி மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கே.எல்.ராகுலின் ஆட்டமிழக்காத அரைசதத்தினால் இந்தியா, மேற்கிந்தியத்தீவுகளை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இந்த வெற்றியின் மூலமாக சுப்மன் கில் தலைமையிலான அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

முன்னதாக அகமதாபாத்தில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா ஒரு இன்னிங்ஸ் மற்றும் 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை தோற்கடித்திருந்தது.

இந் நிலையில் டெல்லியில் நடைபெற்ற இறுதி டெஸ்டில் மேற்கிந்திய தீவுகள் அணி 121 ஓட்டங்கள் வெற்றி இலக்கு நிர்ணயித்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 4ஆவது நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 1 விக்கெட்டுக்கு 63 ஓட்டங்கள் எடுத்திருந்தது. நேற்று இறுதி நாள் ஆட்டத்தை தொடர்ந்த இந்திய அணியில் சாய் சுதர்சன் 39 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.


பின்னர் வந்த அணித்தலைவர் சுப்மன் கில் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். எனினும் கே.எல். ராகுல் பொறுப்புடன் ஆடி 58 ஓட்டங்கள் எடுக்க இந்திய அணி வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 2-0 என்ற கணக்கில் தொடரை முழுமையாகக் கைப்பற்றிய இந்தியா, ஓர் அணிக்கு எதிராக (மேற்கிந்தியத் தீவுகள்) அதிகமுறை தொடர்களை (10) வென்ற அணி என்ற சாதனையைச் செய்தது.

இதற்கு முன் தென் ஆபிரிக்க அணி 10 முறை மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக தொடரை கைப்பற்றி இருந்தது.

இச் சாதனைப் பட்டியலில் 9 முறை அவுஸ்திரேலியாவும் 8 முறை இலங்கை அணிகளும் உள்ளன. மேலும் இந்திய அணி சுப்மன் கில் தலைமையில் முதல் முறையாக டெஸ்ட் தொடரை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## என்னுடைய சாதனையை யாராலும் முறியடிக்க முடியாது-உசைன் போல்ட்




தடகளப் போட்டிகளில் தன்னுடைய சாதனை இன்னும் பல ஆண்டுகளுக்கு முறியடிக்கப்படாது என உசைன்போல்ட் தெரிவித்துள்ளார்.

100 மீற்றர் தடகளப் போட்டியில் தனது உலக சாதனை குறித்து உசைன் போல்ட் கூறியதாவது,

100 மீற்றர் தடகளப் போட்டியில் நான் செய்த சாதனை மிகவும் நம்பமுடியாததாக இருக்கிறது. என்னுடைய இந்தச் சாதனையை யாரும் விரைவில் முறியடிப்பார்கள் என நினைக்கவில்லை.

200 மீற்றர் தடகளப் போட்டியில் என்னுடைய உலக சாதனை முறியடிக்கப்படலாம்.

அதற்கான வாய்ப்பிருக்கிறது. ஆனால், அதுவும் மிகவும் கடினமான ஒன்று என்றே கூறுவேன் எனத் தெரிவித்தார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக்கட்டணத்தில் மாற்றமில்லை

## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு


**(கொழும்பு)**

**மின்சாரக் கட்டணத்தில் எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

கொழும்பில் இடம்பெறும் விசேட செய்தியாளர் சந்திப்பில் அந்த ஆணைக் குழுவின் தலைவர் பேர சிரியர் கே.எல்.சந்திரலால் இதனை அறிவித்தார்.

முன்னதாக, 6.8 சத வீதத்தினால் மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என இலங்கை மின்சார சபை, இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன் மொழிவுகளை முன்வைத் திருந்தது.

இது தொடர்பில், தொடர்புடைய தரப்பினர்களிடம் அந்த ஆணைக்குழு கருத்துகளையும் ஆலோசனைகளையும் கோரியிருந்தது. அவற்றை பரிசீலித்ததையடுத்து, மின்சார கட்டணத்தில் எந்தவித மாற்றத்தையும் மேற்கொள்ளாது எதிர்வரும் 3 மாதங்களுக்கு தற்போதைய கட்டணத்தையே பேணிச் செல்வதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ந)



# சஷீந்திர பிணையில் விடுதலை

(கொழும்பு)

இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு மக்கள் கலவரத்தின்போது முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவின் அரசியல் அலுவலகம்அழிக்கப்பட்டதற்காக, இழப்பீடாக 8.85 மில்லியன் ரூபாவை சட்டவிரோதமாகப் பெற்றதாகக் கூறப்படும் ஒரு ஊழல் குற்றச்சாட்டின் பேரில், சஷீந்திர ராஜபக்ஷ இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந)

# வேகமாக பரவும் 'டைனியா பெடிஸ்'

## கர்ப்பிணித் தாய்மார்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தோல் சிவத்தல், வியர்வை, கொப்புளங்களை ஒத்த சிறிய கொப்புளங்கள் மற்றும் அரிப்பு ஏற்பட்டால் உடனடியாகத் தோல் மருத்துவரை அணுக வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத் திய சாலையில் தோல் வைத்திய நிபுணர் இந்திரா கஹாவிட்ட இந்த கோரிக்கையினை விடுத்துள்ளார்.

இது டைனியா பெடிஸ் ஆக இருக்கலாம் என்றும், இந்த நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாகவும், கர்ப்பிணித் தாய்மார்களும் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, அக்குள் மற்றும் இடுப்பு உட்பட உடல் கடுமையாக அரிப்பு ஏற்பட்டால், அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்துவது நல்லதல்ல, ஏனெனில் அது நோயை மோசமாக்கும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பெரும்பாலும் வாய் வழி மருந்துகள் வழங்கப்படுவதில்லை,

ஆனால் தோல் மருத்துவர்கள் இப்போது டைனியா பெடிஸ் நோய் மோசமடைந்த நோயாளிகளுக்கு வாய்வழி மருந்துகளை பரிந்துரைக்க வேண்டியிருக்கிறது என்று வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

பிரசவத்திற்குப் பிறகு கருவைப் பாதிக்கும் என்பதால், கர்ப்ப காலத்தில் சரியான சிகிச்சையைப் பெறுவதன் மூலம் இந்த நோயை முழுமையாக குணப்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய மருத்துவமனையின் தோல் மருத்துவ மனைக்கு வருகை தரும் நோயாளிகளில் சுமார் 20 சதவீதம் பேர் டைனியா பெடிஸால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# சோளனில் தீவிரமடையும் படைப்புழு தாக்கம்

(கந்தளாய்)

கந்தளாய் சீனிபுரப் பகுதியில், பல ஏக்கர் கணக்கிலான சோளப்பயிர் செய்கையில் படைப்புழுவின் தாக்கம் கடுமையாக அதிகரித்துள்ளதால், விவசாயிகள் பெரும் கவலை தெரிவித்துள்ளனர்.

கந்தளாய் பிரதேசத்தின் அக்போபுர, ஜெயந்திபுர, சீனி புர உள்ளிட்ட பகுதிகளில் தற்போது விரிவாக சோளப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது சோளப் பயிர்கள் கதிர் வருகின்ற நிலையிலேயே இந்தப் படைப்புழுத்தாக்குதல் அதிகரித்திருப்பது, பெருமளவில் பாதிக்கும் அபா யத்தை உருவாக்கியுள்ளது.

படைப்புழுவின் பரவலைக் கட்டுப்படுத்த பல வகையான பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளித்தும் எந்தவித பலனும் இல்லாத நிலையில் உள்ளோம்.

மருந்துகளைப் பயன்படுத்திய பின்னரும் தாக்கம் குறையாததால், செய்கை முழு வதும் அழிவடையும் அபாயம் உள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர். (ந)

# இராசிபலன்

**15.10.2025,**
**புரட்டாதி 29, புதன்கிழமை**
**நவமி பிற்பகல் 3.27 மணிவரை**

**பூசம் பிற்பகல் 5.15 மணிவரை**
**சுபநேரம் 4.32-6.02 மணிவரை**
**இராகுகாலம் 12.02-1.32 மணிவரை**

**சந்திராஷ்டமம்-**
**மூலம் ,பூராடம்**

**வளவன்**



தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்



கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு



கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழும் வாய்ப்புண்டு, வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படலாம்.



சொந்த பந்தங்களின் சந்திப்பு இடம்பெறலாம், பேச்சில் கனிவு பிறக்கும், செய்தொழில் மேண்மையுண்டு, மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், போசனசுகமுண்டு.



நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நம்பி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள், அரசு வழியில் அனுகூல முண்டு, போசன சுகமுண்டு



திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.



தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்,வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.



ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.



புதிய நட்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.



குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணப் புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.



திட்டமிட்ட காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம்.



அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் எதிர்கால நலன் தொடர்பில் அக்கறை காட்டுவீர்கள்

**பணிவற்ற மனைவி பகைவர்க்கு ஈடாவாள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊற்றுப்புலம் கிராமம் பாலைவனமாக மாறும் அபாயம்!


(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஊற்றுப்புலம் கிராமம் வினைத்திறனான நீர்ப்பாசன முறையால் விவசாயம் நடத்தும் கிராமமாக இருந்தது.

ஆனால் 2012 ஆம் ஆண்டுக்குப் பிறகு, 300 அடி அளவுக்கு அதிகமாக குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு அதிக நீர் எடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் விளைவாக, ஊற்றுப்புலம் கிராமத்தில் வறட்சி அதிகரித்து, மரங்கள் மற்றும் செடிகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.


விவசாயிகள் குறிப்பிட்டதன்படி, இது தொடர்ந்தால் ஊற்றுப்புலம் கிராமம் பாலைவனமாக



மாறும் அபாயம் உள்ளது, மேலும் விவசாயிகள் முழுமையாக விவசாயத்தை கைவிட வேண்டிய நிலை உருவாகும்.

எனவே ஊற்றுப்புலம் குளத்தை அபிவிருத்தி செய்து நீர்த் தேக்கத்தை பாதுகாக்குமாறும் ஊற்றுப்புலம் குளத்தின் பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு, விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் வாய்ப்புகளை முழுமையாக பரிசீலித்து, அதற்கேற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-316)

# முல்லை மாவட்டச் செயலாளர் ரவிகரன் எம்.பி சந்திப்பு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோருக்கிடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தின் விளையாட்டுத்துறை மேம்பாடு தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்தல், முல்லைத்தீவு நகரில் மணிக்கூட்டுக் கோபுரம் அமைத்தல், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வெள்ளப்பள்ளம் பகுதியில் சட்டவிரோதமாக காடுகள் அழிக்கப்பட்ட விவகாரத்திற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-299)

# மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் 'பொற்பணி செம்மல்' விருது வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் கண்பரிசோதனை செய்தவர்களுக்கான மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் விருது வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணிக்கு வேதம் மூளாய் பகுதியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் கலந்து கொள்ளவுள்ளதோடு, சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் ச.ஜெயந்தன், வலிகாமம் மேற்கு பிரதேச சபை உப தவிசாளர் க.லங்கேஸ்வரன் மற்றும் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபர் பா. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சட்டத்தரணி எஸ்.சிவபாலசுப்பிரமணியம், மூளாய் கிராமசேவகர் சிவரூபன் மற்றும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை உறுப்பினர் நாகரஞ்சனி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும், இப்பிரதேசத்தில் சமூக செயற்பாட்டாளர்களாக விளங்கும் ச.சின்னையா, மா. கணநாதன் மற்றும் ஆ.ஜெயராஜ் ஆகியோர் "பொற்பணி செம்மல்" விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3)



யாழ்ப்பாணம் கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கிளப், வடலியடைப்பு அரசடி சனசமூக நிலையத்துடன் இணைந்து வருடாந்த மருத்துவ முகாமை கடந்த 12 ஆம் திகதி நடத்தியது.

முகாமில் 150 பயனாளர்கள் பல வகையான சேவைகளைப் பெற்றனர். இதில் தொற்றுநோய் சம்பந்தமான கருத்தரங்குகள், இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை மற்றும் இலவச மூக்கு கண்ணாடிகள் என்பன வழங்கப்பட்டன.

# கே.ஏ.சுப்பிரமணியம் நினைவாக 'பகிர்வும் பரவலாக்கலும்' நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இடதுசாரி முற்போக்கு சிந்தனையாளரான கே.ஏ.சுப்பிரமணியம் நினைவாக, அவரது மனைவியும் எழுத்தாளருமான திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியத்தினால் சுழிபுரத்தில் அமைக்கப்பட்ட கே. ஏ.எஸ் சத்தியமனை நூலகத்தில், எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமிழ் மொழி மூலம் சிறுவர்களுக்கான நூல்களை எழுதி வெளிக் கொண்டு வந்த, சிறுவர் இலக்கிய எழுத்தாளர்கள் அனைவரையும் இணைத்து "பகிர்வும் பரவலாக்கலும்" என்ற நிகழ்வை நடத்த உள்ளார். இலங்கை முழுவதிலும் இருந்து கலந்து கொள்ளும் அனைத்து எழுத்தாளர்களையும் உள்ளடக்கிய முழுநாள் நிகழ்வாக காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை பல நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

அங்கே சிறுவர்களுக்கான நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய பிரத்தியேக நூலகம் ஒன்றும் திறக்கப்படவுள்ளது.

அத்துடன் புதிய சிறுவர் நூல்கள் வெளியீடும், கண்காட்சியும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் அனுபவ எழுத்தாளர்களான திக்கு வல்லை கமால், ச.அருளானந்தன் (கேணிப்பித்தன்) ஓ.கே. குணநாதன், அகளங்கன், கோகிலா மகேந்திரன் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (8)



உடுவில் பிரதேச செயலகத்திற்கு புதிய பிரதேச செயலாளராக பிறேமினி பொன்னம்பலம் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் ம.பிரதீபனிடம் தமக்கான நியமனக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார். இவர் முன்னர் சங்கானை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 350 |
| தக்காளி | 200 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 140 |
| கோவா | 200 | 200 | 200 |
| கரட் | 250 | 250 | 240 |
| பூசணி | 60 | 80 | 60 |
| புடோல் | 300 | 200 | 300 |
| வாழைக்காய் | 120 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 150-300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 180 |
| பாகற்காய் | 450 | 500 | 500 |
| வெண்டக்காய் | 250 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 240 | 200 | 300 |
| லீக்ஸ் | 250 | 300 | 250 |
| பீற்றூட் | 140 | 200 | 150 |
| கறிமிளகாய் | 450 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 |
| போஞ்சி | 400 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | 250 | 160 |
| கீரை - 1 பிடி | 60-140 | 150 | 100 |
| தேசிக்காய் | 1800 | 1600 | 2400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 150-200 |
| இராசவள்ளி | 250 | 1200 | 1000 |
| வெங்காயப்பூ | 350 | 600 | 450 |
| முள்ளங்கி | 150 | 200 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 150 | 60 |
| வல்லாரை | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆயிரம் கோடி பாதாள உலக சொத்துக்கள் அரசாங்கம் வசம்

(கொழும்பு)

2021 மற்றும் 2024 இற்கும் இடையில் அரசாங்கம் இதுவரை 3902 கோடி ரூபா மதிப்புள்ள பாதாள உலக குற்றவாளிகளின் சொத்துக்களைக் கைப்பற்றியுள்ளது.

குறித்த தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் உதயகுமார் வுட்லர் வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல், 730 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் செயலற்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் சொத்துக்களையும் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், முடக்கப்பட்ட சொத்துக்களில் 354 பவுண் தங்கம், 72 கார்கள், 35 சொகுசு வீடுகள், 37 ஏக்கர் நிலம் மற்றும் ரூ. 670 மில்லியன் ரொக்கம் ஆகியவை அடங்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# சிறுவர், முதியோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் நடத்தும் சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தினவிழா இன்று புதன்கிழமை மாலை 2 மணிக்கு பிரதேச செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலாளர் ஈ. தயாரூபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன், சிறப்பு விருந்தினர்களாக சமூக செயற்பாட்டு மைய பிரதம நிறைவேற்று அலுவலர் ந.சுகிர்தராஜ் மற்றும்மயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். அலிஸ்ரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

**தொடர்புகளுக்கு- 076 682 7368**

**யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி**

**(முன்பதிவு செய்து வரவும்)**

(5620)


## யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம் அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ள பாடசாலை | பாடசாலை வகை |
|---|---|---|
| 01 | யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை | II |
| 02 | யா/கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம் | II |
| 03 | யா/வளலாய் அ.மி.த.க. பாடசாலை | III |

**தகைமைகள்:**

- ➢ வகை II பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் II** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **இலங்கை அதிபர் சேவை தரம் III** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்க இயலும். எனினும் **இலங்கை அதிபர் சேவை தரம் II** ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.
- ➢ வகை III பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் III** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- ❖ விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்று வருட காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
- ❖ விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். எனினும் அதிபர் சேவை தர நிலையில் ஏற்படும் பதவியுயர்வின் போது இந்நிபந்தனை பொருந்தாது. (பிரதி, உதவி, அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருந்தமாட்டாது)

**குறிப்பு:**

- ❖ விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தங்களின் வலயக்கல்விப் பணிப்பாளரூடாக 2025.10.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் **"வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2025(IV)"** எனக் குறிப்பிடவும்.

**மாலதி முகுந்தன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்,**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(C-4107)

## வரைவுள்ள புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

### பதவி வெற்றிடங்களுக்கு வெளிவாரி விண்ணப்பம் கோரல்

வரைவுள்ள புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பொதுமுகாமையாளர் (101/08), கணக்காளர் (104/10) பதவிகளிற்கு வெற்றிடம் நிரப்புவதற்காக தகமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

பதவிக்கான பெயர் :- **பொதுமுகாமையாளர்**
குறியீட்டு இலக்கம் :-101/08
சம்பள அளவுத்திட்டம் :-35665-460x10-480x10-45065 (02/2025சுற்றுநிரூபம்)
427980-5520X10-5760X10-540780
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் சுற்றுநிரூபத்திற்கு அமைவாக கொடுப்பனவு வழங்கப்படும்)
வெற்றிடம் :-01

<u>அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்</u>

அ).கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமைநிலை/மேற்பார்வைநிலை பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமைநிலை/மேற்பார்வை நிலை ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

<u>அல்லது</u>

ஆ).அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் / அதற்கு சமமான தகைமை. இத் தகைமையானது கணக்கியல்/வியாபாரப்புள்ளிவிபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்/ இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

<u>அல்லது</u>

இ). கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப்பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.
க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

பதவிக்கான பெயர் :- **கணக்காளர்**
குறியீட்டு இலக்கம் :-104/10
சம்பள அளவுத்திட்டம் :-34745-445x10-450x10-43695 (02/2025சுற்றுநிரூபம் )
416940-5340X10-5400X10-524340
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் சுற்றுநிரூபத்திற்கு அமைவாக கொடுப்பனவு வழங்கப்படும்)
வெற்றிடம் :-01

<u>அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்</u>

அ). கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப்பதிவாளர்/கணக்கு/கணக்காய்வு எழுதுனர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப்பதிவாளர்/கணக்கு/கணக்காய்வு எழுதுனர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

<u>அல்லது</u>

ஆ) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/இதற்கு சமமான தகைமை. இத் தகைமையானது கணக்கியல்/ வியாபாரப்புள்ளி விபரவியல்/வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்/இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலான டிப்ளோமா/இதற்குச் சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால்/தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

<u>அல்லது</u>

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 02 ஆண்டு கால அனுபவம்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 02 ஆண்டு கால அனுபவம்.
க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டு கால அனுபவம்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 03 ஆண்டு கால அனுபவம்.

குறிப்பு :-

1. விண்ணப்ப முடிவுத்திகதியில் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தாங்கள் கடமை புரியும் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தமது கூட்டுறவுச் சங்கத்தினூடாக விண்ணப்பிக்காதுவிடில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. சங்கம் கோரும் பிணைப் பணத்தினை ரொக்கமாக செலுத்துவதுடன் சங்கம் கோரும் ஆதனப் பிணையும் செலுத்துதல் வேண்டும்.
3. விண்ணப்ப முடிவுத்திகதி 27.10.2025
4. சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்து சான்றிதழ்களின் போட்டோப்பிரதிகளையும் இணைத்து 27.10.2025 ஆம் திகதிக்கு முன்னர் **"தலைவர், புங்குடுதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு"** எனும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.


**தலைவர்,**
**புங்குடுதீவு நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்.**
**077 262 7697**

(5655)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மீண்டும் வெடித்த அமெரிக்கா - சீனா
## வர்த்தகப் போர்




(வோஷிங்டன்)

அமெரிக்காவும் சீனாவும் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் கப்பல் நிறுவனங்கள் மீது பரஸ்பரத் துறைமுக கட்டணங்களை விதிப்பதன் மூலம் ஒரு புதிய சுற்று பழிவாங்கும் நடவடிக்கை களை மீண்டும் தொடங் கின.

உலகின் இரண்டு பெரிய பொருளாதார நாடுகளுக்கு இடையிலான வர்த்தகப் போரில் கடல் பகுதியை ஒரு முக்கிய முன்னணியாக மாற்றும் நடவடிக்கையாக இது அமைந்துள்ளது.

இதன்படி, அமெரிக்கா விற்குச் சொந்தமான அல்லது கொடியிடப்பட்ட கப்பல்களில் புதிய கட்ட ணங்களை வசூலிக்கத் தொடங்கியுள்ளதாக பீஜிங் உறுதிப்படுத்தியது.

ஆனால் சீனாவால் நிர் மாணிக்கப்பட்ட கப்பல் களுக்கு இது பொருந்தாது என்றும் பீஜிங் கூறுகி றது.


அமெரிக்க கப்பல் நிறு வனங்களை ஆதரிப்பதற் காக உருவாக்கப்பட்டதாக வோஷிங்டன் கூறும் சீனக் கப்பல்கள் மீதான அமெரிக்க கட்டணங்களுக்கு பதிலடி யாக இந்த நடவடிக்கை வந்துள்ளது.

இந்த ஆண்டின் தொடக் கத்தில், அமெரிக்க ஜனா திபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம், உலகளாவிய கடல்சார் தொழிற்துறையில் சீனாவின் பிடியைத் தளர்த் தவும், அமெரிக்கக் கப்பல் கட்டுமானத்தை வலுப் படுத்தவும் சீனாவுடன் தொடர்புடைய கப்பல்களில் கட்டணம் வசூலிக்கும் திட் டங்களை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கையெழுத்தானது கா

(கெய்ரோ)

காசா அமைதித் திட்ட வரலாற்று ஒப்பந்தத்தில் முதல் நபராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத் திட்டுள்ளார்.





எ
She
முக்
வர
பட்டு
இ
அ
முத்
இ
நபர
ட்ரம்

## உலக அமைதி நடவடிக்கைக்கு பாராட்டுக்கள்
## ட்ரம்பை மெச்சிய பில் கிளிண்டன்

(வோஷிங்டன்)

இஸ்ரேல்-ஹமாஸ் அமைதி ஒப்பந்தத்தை அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் வரவேற்றுள்ளார்.


பிராந்தியத்தில் அமைதி நிலவ எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கை என்றும் அவர் பாராட்டி இருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பரிந்துரை செய்த 20 அம்ச திட்டத்தை ஒப்புக் கொண்டு, இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது.

எகிப்தில் இது தொடர்பாக நடைபெற்ற அமைதிக்கான உச்சி மாநாட்டில், போர் ஒப்பந்தம் கையெழுத் தானது.

ட்ரம்பின் இந்த முயற் சியை உலக நாடுகளின் பல்வேறு தலைவர்கள் வரவேற்றுள்ளனர். இந் நிலையில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் இந்தப் போர் நிறுத்தத்தை வரவேற்றுள் ளார்.





இதுகுறித்து அவர் தமது எக்ஸ் வலைத்தளப் பதிவில் கூறியுள்ளதாவது:

ஒக்டோபர் 7ஆம் திகதி 2023 முதல் இஸ்ரேல் - காசா மீதான தாக்குதல் தாங்க முடியாத இழப்பை ஏற்படுத்தி இருக்கின் றது.


இதைப் பற்றி பேசுவதற்கும் அது பற்றி பேசுவதற்கும் மனது மிகவும் கடினமாக உள்ளது.

போர் நிறுத்தம் நடை முறை, 20 பிணைக் கைதிகள் விடுவிப்பு, காசா வுக்கான உதவிகள் போன்ற நடவடிக்கைகளுக்கு நன்றி. அனைவரையும் ஈடுபாட் டுடன் வைத்திருந்த ட்ரம்ப், கட்டார் மற்றும் பிறநாட்டு தலைவர்கள் பாராட்டுக் களுக்கு தகுதியானவர்கள்.

எதிர்காலத்தை யோசித்து, அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அமெரிக்கா மற்றும் மற்ற நாடுகளின் ஆதரவுடன் பாலஸ்தீனியர்கள், இஸ் ரேல் மக்கள் கண்ணியம், பாதுகாப்பு ஆகியவற்றை வழங்கும் வகையில் நீடித்த அமைதிக்கான முயற்சியாக மாற்ற வேண்டும் எனப் பில் கிளிண்டன் தெரிவித் தார். (நி)

## பொருளாதா
## நோபல் பரிசு





ஆல்ஃபிரட் நோபலின் நினைவாக 2025 ஆம் ஆண்டுக்கான பொரு ளாதார அறிவியலுக்கான ஸ்வெரிஜஸ் ரிக்ஸ்பேங்க் பரிசை "புதுமை சார்ந்த பொருளாதார வளர்ச்சியை விளக்கியதற்காக" ஜோயல் மோகிர் (நெதர்லாந்து), பிலிப் அகியோன் (பிரான்ஸ்)

மற்
(கன
வழ
தாக
கடப்
வித்
ஒ
நுட்
மூல
கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## சா அமைதி ஒப்பந்தம்!



கிப்தின் ஷர்ம் எல்-ஷேக் (Sharm El-eikh) நகரில் நடைபெற்ற வரலாற்று கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் இந்த லாற்று நடவடிக்கை முன்னெடுக்கப் டுள்ளது.

இதன்போது, காசாவுக்கான சர்வதேச மைதி ஒப்பந்தம் முறைப்படி கையெ த்திடப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று ஒப்பந்தத்தில் முதல் ாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ப் கையெழுத்திட்டார்.

மேலும், ட்ரம்பைத் தொடர்ந்து துருக்கி ஜனாதிபதி எர்டோகன், எகிப்து ஜனாதிபதி அப்துல் ஃபத்தா அல் சிசி ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டுள்ளனர்.

இதற்கிடையில், அமைதி ஒப்பந்தம் குறித்து ஊடகங்களிடம் பேசிய ட்ரம்ப், இது உலகிற்கே நம்ப முடியாத நாள் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த ஒப் பந்தம் வெற்றிகரமாக செயற்பட்டால் மத்திய கிழக்கில் ஏற்பட வாய்ப்பு இருக்கும் மூன்றாம் உலகப் போர் தடுக்கப்படும் என்றும் அவர் தெரி வித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி)

## அமெரிக்காவில்
## வீதியில் விழுந்த விமானம்
## இருவர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின், டெக் சாஸ் மாகாணத்தில் வீதியில் சென்ற லொறி மற்றும் கார்கள் மீது விமானம் விழுந்ததால் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

அமெரிக்காவின் டெக் சாஸ் மாகாணம் போர்ட் வொர்த் அலையன்ஸ் விமான நிலையத்தில் இருந்து சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டது. டாரன் என்ற இடத்துக்கு அருகே சென்றபோது அந்த விமானம் விமானியின் கட்டுப்பாட்டை இழந்தது.


இதனால் அங்குள்ள நெடுஞ்சாலையில் விமா னம் விழுந்து நொறுங் கியது. இதில் 2 பேர் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அப்போது அந்த வீதியில் சென்ற லொறி மற்றும் கார்கள் மீது விமானம் விழுந்ததால் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

இதனால் அந்த இடம் முழுவதும் கரும்புகை மண்டலமாக காட்சிய ளித்தன. இதனையடுத்து அங்கு விரைந்த தீய ணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

இந்த விபத்து தொடர்பில் விமான போக்குவரத்து திணைக்களம் விசாரணை நடத்தி வருகிறது. (நி)

## ர அறிவியலுக்கான
## ூவருக்கு பகிர்ந்தளிப்பு




றும் பீட்டர் ஹோவிட் னடா) ஆகியோருக்கு ழங்க தீர்மானித்துள்ள ் ரோயல் ஸ்வீடிஷ் அக் மி ஆஃப் சயின்சஸ் அறி த்துள்ளது.

ஒரு பாதியை "தொழில் ்ப முன்னேற்றத்தின் லம் நீடித்த வளர்ச்சிக் ன முன்நிபந்தனைகளை அடையாளம் கண்டதற் காக" ஜோயல் மோகிருக்கு வழங்கவும், ஏனைய பாதியை "படைப்பு அழிவின் மூலம் நீடித்த வளர்ச்சியின் கோட் பாட்டிற்காக" அகி யோன் மற்றும் ஹோவிட் டிற்கு கூட்டாக வழங்கவும் நோபல் குழு முடிவு செய் துள்ளது. (நி)

## ரஷ்யாவை மிரட்டும் ட்ரம்ப்
## 2500 கி.மீ தூரம் சென்று தாக்கும் ஏவுகணை!
### உக்ரைனுக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

உக்ரைனில் நடக்கும் போர் விரைவில் தீர்க்கப்படாவிட்டால், உக்ரைனுக்கு நீண்ட தூர டோமாஹாக் ஏவுகணைகளை அனுப்ப நேரிடும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ரஷ்யாவை எச்சரித்துள்ளார்.

ட்ரம்பின் எச்சரிக்கைக்கு பதிலளித்த முன்னாள் ரஷ்ய ஜனாதிபதியும் தேசிய பாதுகாப்பு சபையின் துணைத்தலை வருமான டிமிட்ரி மெட் வெடேவ், "உக்ரைனுக்கு டோமா ஹாக்ஸ் வழங்கப் பட்டால், அது அனை வருக்கும், குறிப்பாக ட்ரம்பிற்கு ஒரு பிரச்சினையாக இருக் கும்.

இது ரஷ்யாவிற்கு அரு கில் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை அனுப்புவது போன்ற மற்றொரு வெற்று அச்சுறுத்தலாக இருக்கும் என்று நாங்கள் நம்புகி றோம்" எனத் தெரிவித் தார்.

2,500 கி.மீ தூரம் வரை சென்று தாக்கும் டோமாஹாக் ஏவுகணை மூலம் உக்ரைன் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவை எளிதில் தாக்க முடி யும்.

இந்த ஏவுகணைகளை பயன்படுத்த அனுமதி வேண்டி அமெரிக்காவிடம் உக்ரைன் கோரிக்கை வைத்துள்ள நிலையில் ட்ரம்பினுடைய கருத்து வெளிவந்துள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீன ஜனாதிபதியை சந்தித்தார்

# பிரதமர் ஹரிணி அமரசூரிய

(பீஜிங்)

பிரதமர் ஹரிணி அமரசூரிய சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் ஒரு பகுதியாக சீன மக்கள் குடியரசின் ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை பீஜிங்கில் உள்ள மக்கள் மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான சமூக - பொருளாதார, கடல்சார் மற்றும் பல்தரப்பு ஒத்துழைப்பைத் தொடர்ந்து விஸ்தரிப்பது குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

முக்கியமான அபிவிருத்திப் பங்களிப்புகளை முன்னெடுத்துச் செல்வது, பட்டுப்பாதை செயற்றிட்டத்தின் கீழ் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடினர். (நி)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

# ஆதனப் பெயர்மாற்றம்

### 36/11, முதலியார்காட்டு வீதி, வட்டாரம் – 01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01, முதலியார்காட்டு வீதியிலுள்ள இல: 36/11 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **சடையர் தெய்வேந்திரம்** ஆகியவர் குறித்த ஆதனமானது 40 வருடங்களுக்கு முன் தன்னால் கொள்வனவு செய்யப்பட்டது எனவும் எனினும் குறித்த உறுதி இடப்பெயர்வின் போது தொலைந்து விட்டதென்றும் குறித்த ஆதனத்தில் 40 வருடகாலமாக எவ்வித குறுக்கீடுகளோ/தடைகளோ அன்றி தானே ஆட்சி செய்து வருவதாகவும், வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 6776/23.03.2009ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**பொன்னுத்துரை கோபி பெண் வேணுகா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6777/23.03.2009ஆம் இலக்க உறுதியால் குறித்த **சடையர் தெய்வேந்திரம்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**ஏரம்பு இராகவன் பெண் ரேணுகா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6778/23.03.2009ஆம் இலக்க உறுதியால் குறித்த **சடையார் தெய்வேந்திரம்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் மற்றொரு பகுதியினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**தெய்வேந்திரம் மகள் ஜெசிதா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6779/23.03.2009ஆம் இலக்க உறுதியால் குறித்த **சடையர் தெய்வேந்திரம்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் மற்றொரு பகுதியினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**தெய்வேந்திரம் கைம்பெண் புஸ்பராணி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு றெ.றோய் டிலக்சன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 244/24.02.2021ஆம் இலக்க உறுதியால் குறித்த **பொன்னுத்துரை கோபியும் பெண் வேணுகாவும், ஏரம்பு இராகவனும் பெண் ரேணுகாவும், இராசகுமார் கைம்பெண் ஜெசிதாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி முழு ஆதனத்தினையும் நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**ஏரம்பு ராகவன் பெண் ரேணுகா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு றெ.றோய் டிலக்சன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 396/28.12.2021ஆம் இலக்க உறுதியால் குறித்த **தெய்வேந்திரம் கைம்பெண் புஸ்பராணி** ஆகியவரிடமிருந்து மேற்படி முழு ஆதனத்தின் ஒரு பகுதியினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு :**

பெயர்: **"வீமசிட்டி"**

இறை: **அராலி கிழக்கு**

விஸ்தீரணம்: **நில.பர.இலா 1 1/2**

எல்லைகள்: **கிழக்கு** – சக்திவேல் குணசீலனின் ஆதனம், **வடக்கு**–ஒழுங்கை, **மேற்கு**–இராசகுமார் கைம்பெண் ஜெசிதா மற்றும் பொன்னுத்துரை கோபி பெண் வேணுகாவின் ஆதனம், **தெற்கு**–பத்திரகாளி கோவிலாதனம்

குறித்த **ஏரம்பு ராகவன் பெண் ரேணுகா** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய **ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **ஏரம்பு ராகவன் பெண் ரேணுகா** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர் வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(5660)

## இன்று ஒரு தகவல் (460)



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மூன்று குருமார்கள்!

ஒரு ஊரிலே ஒரு ஞானி இருந்தார்.

மிகவும் பெரிய ஞானி .அதிக வயதாகிவிட்டது. கடைசிக் காலத்தில்அவரிடம் சில பேர் வந்தார்கள். "உங்களது குரு யார்?" என்று கேட்டார்கள் அவர் நிமிர்ந்து பார்த்தார்.

"எனக்கு ஆயிரக் கணக்கான குருமார்கள் உண்டு அவர்கள் பெயர் எல்லாம் நான் சொல்ல வேண்டும் என்றால் காலம் போதாது.

ஆனால் முக்கியமான மூன்று பேரைப் பற்றி மட்டும் உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்.

அந்த மூன்று பெயரிலே ஒருத்தன் - ஒரு திருடன்.

ஒரு சமயம் ஒரு பாலைவனம் வழியாக நான் போய்க் கொண்டிருந்தேன். அப்போது வழி தவறிப் போய் ஒரு கிராமத்துக்குப் போய்விட்டேன். அது இருட்டு நேரம்.நடு ராத்திரி, ஊரே உறங்கி போய்விட்டது. அந்த நேரத்திலே ஒரு ஆள் மட்டும் ஒரு வீட்டு சுவற்றிலே ஏதோ செய்து உள்ளே நுழைய முயற்சி செய்துகொண்டிருந்தான். அவனிடம் போய். "நான் இன்றைக்கு இங்கே எங்கே தங்க முடியும்?" என்று கேட்டேன். அதற்கு அவன் "இந்த இராத்திரி வேளையிலே அது மிகவும் சிரமம் ஒரு திருடனோடு உங்களாலே தங்கமுடியும் என்றால் நீங்கள் என்னோடு தங்கலாம்!" என்றான்.

நான் அவனுடன் ஒரு மாதம் தங்கியிருந்தேன். ஒவ்வொரு நாள் இராத்திரியும்.. "இப்ப நான் என்னுடைய வேலைக்குப் போகிறேன். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்! என்று சொல்லிவிட்டுப் போவான்.

அவன் திரும்பி வந்தவுடன் "உனக்கு ஏதாவது கிடைத்ததா?" என்று கேட்பேன். அதற்கு அவன்... "இன்றைக்கு இராத்திரி ஒன்றுமில்லை. நாளைக்கு மறுபடியும் முயற்சி செய்வேன்!" என்பான். ஒருபோதும் அவன் நம்பிக்கை இழந்ததே கிடையாது. எப்பவும் சந்தோஷமாகவே இருந்தான்.

நானும் ரொம்பக் காலமாக தியானம் செய்துகொண்டே இருந்தேன். ஒன்றுமே நடக்கவில்லை. ஆனால் நான் என்ன செய்தேன் தெரியுமா? மனது வருத்தப்படும். நம்பிக்கை இழந்துவிடுவேன். அப்போது எல்லாம் அந்தத் திருடனுடைய விடா முயற்சிதான் ஞாபகத்துக்கு வரும்.

என்னுடைய இரண்டாவது குரு ஒரு நாய்.

ஒரு சமயம் எனக்கு ரொம்ப தாகம் இருந்தது. ஒரு நதியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன்.

அப்போது ஒரு நாயும் வந்தது. அதற்கும் தாகம் ஓடி வந்து ஆற்றைப் பார்த்தது. அதனுடைய நிழல் ஆற்றிலே தெரிந்தது. அதைப் பார்த்து பயந்துவிட்டது. அதாவது அது தன் சொந்த உருவத்தையே கண்டு பயந்தது. அதைப் பார்த்துக் குரைத்தது. திரும்பி ஓடிவந்தது. ஆனாலும் அதுக்குத் தாகம் அதிகமாக இருந்ததினாலே அது மறுபடியும் திரும்பி வந்தது இப்படி சில தடவை செய்தது இருந்தாலும் கடைசியிலே தண்ணீரிலே குதித்தது.

இப்படிக் குதித்தவுடனே அதனுடைய உருவமும் மறைந்துவிட்டது. இதைப் பார்த்தேன். நான் என்ன புரிந்துகொண்டேன் என்றால்

"எவ்வளவுதான் பயம் இருந்தால்கூட ஒருவன் தைரியமாக காரியத்திலே இறங்க வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டேன். எனக்கு இந்தப் போதனை அந்த நாயிடமிருந்து கிடைத்தது!

என்னுடைய மூன்றாவது குரு யார் என்றால், அது ஒரு சின்னக்குழந்தை. நான் ஒரு சமயம் ஒரு நகரத்திற்குப் போனேன். அங்கே ஒரு குழந்தை எரிகின்ற மெழுகுவர்த்தி ஒன்றை எடுத்துக்கொண்டு வந்தது. நான் அந்தக் குழந்தையைப் பார்த்து வேடிக்கையாகக் கேட்டேன்.

"ஏன்... பாப்பா... இந்த மெழுகுவர்த்தியை நீ கொளுத்தினியா?" என்று கேட்டேன். ஆமாம்!" என்றது அந்தக் குழந்தை.

"சரி... இந்த மெழுகுவர்த்தி முன்பு எரியாமல் இருந்தது. இப்போது எரிகிறது. இந்த மெழுகுவர்த்திக்கு வெளிச்சம் எங்கேயிருந்து வந்தது என்று எனக்குக் காட்ட முடியுமா?" என்று கேட்டேன்.

இதற்கு அந்தக் குழந்தை சிரித்துக்கொண்டுஅந்த மெழுகுவர்த்தியை ஊதி அணைத்துவிட்டது. அதன்பிறகு என்னைப் பார்த்துக் கேட்டது.

மெழுகுவர்த்தியின் வெளிச்சம் "போனதைப் பார்த்தீர்கள்" அது எங்கே போனது என்று எனக்குச் சொல்லுங்கள்!" என்றது.

அந்தக் குழந்தை இப்படிக் கேட்டதும்

என்னிடம் இருந்த இந்த ஆணவம் அழிந்தது. நான் படித்ததெல்லாம் அந்த விநாடியிலே சுக்கு நூறாகியது! எனது முட்டாள்தனத்தை நான் உணர்ந்தேன்." என்று எல்லவாற்றையும் அந்த ஞானி விபரமாகச் சொன்னார். அதனாலே நாம் இன்னாரிடம் இருந்துதான் இதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது இல்லை! யாரிடமிருந்தும் எதையும் கற்றுக் கொள்ளலாம். நம் ஆள் ஒருவன் ஒரு நாய் வளர்த்துக் கொண்டிருந்தான். அந்த நாய்க்கு வால் கிடையாது. யாரோ ஏற்கெனவே வெட்டி எடுத்துவிட்டார்கள். "இந்த நாய்தான் சார் எனக்குக் குரு. அதனிடமிருந்துகூட நான் பாடம் கற்றுக் கொண்டிருக்கிறேன்! என்றான்.

அப்படி என்ன கற்றுக்கொண்டாய் அந்த வால் இல்லாத நாயிடமிருந்து!" என்று கேட்டேன்.

"நாம் யாருடமும் வாலாட்டக்கூடாது என்ற பாடத்தை அதனிடமிருந்துதான் நான் கற்றுக்கொண்டேன்!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர்16: உலக உணவு தினம்: நல்லுணவுக்காக கைகோர்ப்போம்!



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
**விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்**
**யாழ்.பல்கலைக்கழகம்**


**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஒக்டோபர் 16 - உலக உணவு தினத்தின் 2025இன் கருப்பொருளாக "நல்வாழ்வு தரும் நல்லுணவுக்காக கைகோர்ப்போம் " (Hand in hand for best food and to give best life) என்பதாகும். இவ்வருடம் ஐக்கிய நாடுகளுக்கான உணவு மற்றும் விவசாயத்துக்கான நிறுவனத்தினது (Food and Agriculture Organization) 80ஆவது ஜனன ஆண்டாகும். பலதேசங்களில் உள்ள மனிதர்களுக்கு உணவளிக்க தன்னார்வமாக உதவிடும் உலகளாவிய உதவிக்கரமாக இந்நிறுவனம் இயங்குவது மனித மாண்புக்கோர் உதாரணமாகும். மக்களது நல்வாழ்வுக்காக பல்வேறு நாடுகளிலுள்ள தன்னார்வ நிறுவனங்களுடன் கைகோர்த்து இந்த நற்பணியை உணவளிக்கும் உன்னத மகோற்சவத்தை சத்தம் சந்தடியின்றி செய்துவரும் நிறுவனங்களில் இது முதன்மையானது. இக்கருப்பொருளினூடாக நாடுகள் அனைத்திலுமுள்ள மக்களை கைகோர்த்து ஒன்றிணைத்து பேரியக்கமாக உணவுற்பத்தியை மேம்படுத்துவதன் மூலம் உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் உணவுகிடைக்க வழிசெய்தலாகும்.

பல நாடுகளில் உணவின்றி மக்கள் தவிப்பதாக தினந்தினம் செய்திகள் தெரிவிக்கின்றன. போர் மேகம் ஐரோப்பாவில் தொடங்கி ஆசியாவின் மேற்குக்கரை வரை மையம் கொண்டிருப்பது நல்ல செய்தியல்லவே. யார் பெரியவர் சிறியவர் என்பதிலேயே அப்பாவிகளான பலவுயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன. இதில் மனித உயிர்கள் ஒருவேளை உணவுக்காக தவிக்கும் நிலையை உலகம் கணக்கிலெடுக்காதிருப்பது ஆச்சரியத்திற்குள்ளாகின்றது. எதற்காக வாழ்கின்றோம் எதற்காக விஞ்ஞான வளர்ச்சி என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. அழிவுக்கான பாதையை வடிவமைப்பது யார் என்பதிலேயே போட்டி நிகழ்கின்றது. அதில் சமாதான பாதைகளையும் சரிசமமாக இரும்புக்கரங்கொண்டு உருவாக்க முனைவதும் நடக்கின்றது.

உணவு உற்பத்தியில் விஞ்ஞான தொழில்நுட்பத்தின் அபரிவிதமான வளர்ச்சி ஏற்பட்டாலும் காலநிலை மாற்றத்தினாலும் மனித மற்றும் இயற்கை பேரழிவினாலும் உற்பத்தி பாரியளவிலான வீழ்ச்சியேற்பட வாய்ப்பிருக்கின்றது. அதில் உணவுப் பஞ்சம் என்பது ஒரு புறமிருக்க ஊட்டச்சத்து குறைபாடு என்பது இன்னொரு பிரச்சினையாக எழுந்திருக்கின்றது. பொதுவாக கடந்த நூற்றாண்டில் பஞ்சத்தின் வீரியம் குறைவடைந்ததாக காணப்பட்டாலும் தற்போது உலக சனத்தொகையைக் கருத்தில் கொண்டால் பதினொரு சதவீதம் அதிகரித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தென் சூடான், நைஜீரியா, சோமாலியா மற்றும் யேமன் ஆகிய நாடுகள் இவ்வாறான உணவுப் பஞ்சத்தை பாரியளவில் தற்போது உணர்ந்திருக்கின்றன. இந்நாடுகளில் உள்நாட்டுப் போர்கள் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதும் ஏதுமறியாத பொது மக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் தினந்தினம் அதிக எண்ணிக்கையில்இறந்து கொண்டிருப்பதும் ஒருபுறமிருக்க ஐரோப்பாவில் ரஷ்யா-உக்ரைன் போர் உக்கிரமடைய இஸ்ரேல்-பாலஸ்தீன பிரச்சினை பேச்சு வார்த்தையில் கைதிகளை மாற்றிக்கொள்ளும் நிலைக்கு வந்திருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு என 2030ஆம் ஆண்டை நிர்ணயஞ் செய்திருந்தாலும் அதற்கான சாத்தியக்கூறு அருகிவருவதாகவே தென்படுகின்றது. உலகம் அழிவுப் பாதையை தேர்ந்தெடுத்ததன் விளைவாக அநாவசியமாக மக்கள் இறக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. உணவுப் பஞ்சத்தைப் பொறுத்த வரையில் ஆபிரிக்காவிலுள்ள சகாரா பகுதி, தென்கிழக்கு மற்றும் மேற்கு




ஆசியா ஆகிய பகுதிகளில் அதிகமாக பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வதாக புள்ளிவிபரங்கள் தெரி விக்கின்றன. இவ்வாறான பிரதேசங் கள் உள்நாட்டுப் போரில் தம் மையே அழித்துக்கொண்டிருக்கும் போது இயற்கையின் அனர்த்தங்க ளான வெள்ளப்பெருக்கு மற்றும் வரட்சி என்பன இன்னொரு பக்கத் தில் இம்மக்களை வரட்டியெடுத்துக் கொண்டிருக்கின்றன.

தற்போது உலக உணவு உற்பத்தி இப்போதிருக்கின்ற மக்களுடைய தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக அறிவிக்கப்பட்டும் இந்த உற்பத்தியான உணவு சரியாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தால் இவ்வாறான பஞ்சம் ஏற்படுவதற்கு சாத்தியமேயில்லை. அப்படியாயின் உணவு உற்பத்தி, அதன் கிடைக்கும் தன்மை என்பனவற்றையும் தாண்டி உற்பத்தியான உணவை உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் கிடைக்கச்செய்வதில் சிக்கல்கள் எழுந்திருக்கின்றன. ஏதோ ஒரு காரணி தடைக்கல்லாக இருப்பது உணரப்பட்டிருக்கின்றது அல்லவா? இதன் பின்புலத்தில் உற்பத்தியில் தன்னிறைவு கண்ட நாடுகள் குறிப்பாக வளர்ந்த நாடுகள் இருப்பதென்பது விசித்திரமாகவும் ஆச்சரியமாகவும் இருக்கின்றதல்லவா. அந்த நாடுகளிலிருந்து தான் நாம் எமக்கு வருடாவருடம் கடனை யும் பெற்றுக்கொள்ளுகின்றோம். மாறாக நாமாக சிந்தித்து எமது வளங்களை பயன்படுத்தி எமது நாட்டை நாம் முன்னுயர்த்த என்று முயற்சிக்கின்றோமோ? அன்றிலிருந்து தான் எமக்கு விடிவுகாலம் என்பதனை நம்மினிய உறவுகள் இதிலிருந்து புரிந்துகொள்ள வேண்டும். வடபிராந்திய அபிவிருத்தி என்பதனை எமது அபிவிருத்தி இலக்காக கொண்டால் அதே போல மற்றைய பிராந்தியங்கள் அல்லது மாகாணங்களும் தங்களுடைய அபிவிருத்தியை மேம்படுத்தினால் அந்தந்த பகுதி மாகாணங்கள் மேன்மை பெறும்.

விஞ்ஞானம் விண்ணில் பறந்து பிற கோள்களில் மனிதன் வாழலாமா என பெருமெடுப்பில் போட்டி போட்டு ஆய்வினை செய்துகொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் மக்கள் பட்டினியால் இறந்து கொண்டிருக்கின்றார்களென்பது எல்லோர் மனதையும் ஒருகணம் உலுப்பிவிட்டிருக்கின்றதல்லவா. உணவு உற்பத்தி ஒருபுறமும் தினமும் ஒரு வேளை கஞ்சிக்கும் வழியில்லாது அல்லாடிக்கொண்டிருக்கும் மக்களை கிராமங்களுக்குள்ளே எந்த வித வருமானமுமின்றி உதவிகளுமின்றி விடப்பட்டுள்ள குடும்பங்களை கேட்டறிந்தால் தெரிந்து கொள்வீர்கள். விஞ்ஞானத்தின் உயர்வு ஆக்கத்திற்காய் இருக்கும் மட்டும் அனைத்தும் நல்லதாகவே இருக்கும் ஆனால் அதனை அழிப்பதற்கும் தீங்கு செய்வதற்கும் புதிய கண்டுபிடிப்புக்களை பரீட்சித்து பார்க்கவும் முயலும் போது விஞ்ஞான வளர்ச்சியின் எதிர்பார்த்த நோக்கம் ஈடேறவில்லை என்றே தோன்றுகின்றது.

உணவுற்பத்தியிலும் ஊட்டச்சத்தினை சமனிலைப்படுத்தும் நிலைக்கும் இந்த பாரபட்சம் நடந்து கொண்டிருக்கின்றது. உலக ஓட்டத்தில் விரைந்துணவு தயாரிக்கும் நிலையில் உலகம் இயங்கிக்கொண்டிருக்கின்றது ஆனால் அதற்காக இயற்கையின் தன்மையை மாற்றி சூழலையும் மாற்றி புதியவகை இனங்களை உற்பத்தி செய்து அதனால் ஏற்படும் பின்விளைவுகளை சிறிதேனும் சிந்தியாது சுழன்றுகொண்டிருக்கும் இவ்வுலகத்தின் சமகால நடப்புக்கள் ஒரு போதும் மக்களின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யப்போவதில்லை மாறாக பல தீங்கான நிலைமைகளுக்குள்ளேயே தள்ளி விடுகின்றன.

பட்டினியின் பிடிக்குள் சிக்கி சின்னாபின்னப்பட்டுக் கொண்டிருக்கும் பல நாடுகள் கடந்த பத்து ஆண்டுகளாக உள்நாட்டுப் போரின் உக்கிரத்தினுள் உடைந்து போனவையாகவே காணப்படுகின்றன. இருப்பதையும் அழித்தொழித்து. உதவியென்று உள்நாட்டுப் போர்களை ஊக்குவித்து அந்தந்த நாடுகளில் அபிவிருத்தியின் அடித்தளமான கிராமங்கள் உடைத்தெறியப்பட்ட சோகக் கதைகளே அநேகம். அடித்தளத்தை உடைத்தெறிந்து விட்டு எவ்வாறு அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும். அதிலும் உணவுற்பத்தியின் மையங்களே கிராமங்கள் தானே! அபிவிருத்தி பற்றி கருத்தரங்கு மற்றும் மாநாடுகள் பல நடைபெற்றும் அவற்றின் தொனிப்பொருளான கிராம அபிவிருத்தி பற்றிய தீர்க்கமான முடிவுகள் பெறப்படவில்லை அத்துடன் அவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கமும் முழுமை பெறவில்லை.

சத்துணவு திட்டங்கள் உருவாக்கப்பட்ட இடங்கள் பலவற்றில் ஒரு வேளை உணவுக்காகவாவது பாடசாலைக்கு பிள்ளைகள் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. உலகத்திலுள்ள 5 வயதிற்கு கீழான 155 மில்லியன் சிறுவர்கள் அல்லது பிள்ளைகள் ஊட்டச்சத்து குறை பாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் எனும் மிகமுக்கியமான தகவல் அனைவரையும் சிந்திக்க துாண்டியிருக்கின்றது. இன்னும் நம்மில் பலருக்கு இந்த ஊட்டச்சத்து குறைபாட்டினால் ஏற்படும் பாதிப்புக்களைக்கூட அறிந்துணர முடியாதிருப்பதனை என்னவென்பது.

எமது பிரதேசத்தில் இந்த உணவுத் தட்டுப்பாடு ஏற்படாமலும் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இன்னும் அவசியம் தேவைப்படுவோர் என இனங்காணப்படுபவருக்கும் உதவிட வேண்டும். வளமான சந்ததியின் எதிர்காலம் சரியாக தீட்டப்படும் திட்டங்களிலும் அவற்றை நடைமுறைப்படுத்து வதிலும் மேலும் அதற்கான சேவைகளிலும் தங்கியிருக்கின்றது. எமது உள்ளூர் வளங்களை சிறப்பாக வினைத்திறனாக எமது வாழ்வியல் சிறக்க நாம் இன்னும் முயற்சி செய்வோம். இதில் தான் எமது வாழ்க்கைக்கு அர்த்தமும் இருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 885



ரவிதாஸன் தீவர்த்தியைப் பிடித்துக் கொண்டு மேலே நடந்தான் சோமன் சாம்பவன் பக்கத்திலேயே சென்றான்.

முன்னொரு சமயம் பெரிய பழுவேட்டரையரும் இளையராணி நந்தினியும் சென்ற அதே பாதையில் அவர்கள் சென்றார்கள். தீவர்த்தியின் புகை சூழ்ந்த வெளிச்சத்தில் நிலவறையின் தூண்களும் அவற்றின் நிழல்களும் கரிய பெரிய பூதங்களைப் போல் தோன்றின. இருளில் வாழும் வௌவால்கள் பயங்கரமான குட்டிப் பேய்களின் தோற்றம் கொண்டிருந்தன. ஆங்காங்கு பிரம்மாண்டமான சிலந்திக் கூடுகளும் அவற்றின் மத்தியில் ராட்சஸ சிலந்திப் பூச்சிகளும் காணப்பட்டன. தரையிலோ விசித்திர வடிவங்கள் கொண்ட ஜீவராசிகள் சில அதிவேகமாகவும் சில மிகவும் மெதுவாகவும் ஊர்ந்து சென்றன. ரவிதாஸன் கூறியது போலவே இனந்தெரியாத பலவிதச் சத்தங்கள் கேட்டன. வெளியே இன்னமும் அடித்துக் கொண்டிருந்த புயலின் சத்தமும் எப்படியோ எங்கிருந்தோ அந்தச் சுரங்க நிலவறைக்குள் வந்து எதிரொலி செய்தது. சோமன் சாம்பவன் திடீரென்று திடுக்கிட்டு நின்று, "ரவிதாஸா! ஏதோ காலடிச் சத்தம் போல் கேட்கவில்லை?" என்று கேட்டான்.

"கேட்காமல் என்ன? நம்முடைய காலடிச் சத்தம் கேட்கத் தான் கேட்கிறது. வீணாக மிரண்டு விடாதே! இப்போது நானும் இருக்கும் போதே இப்படிப் பயப்பட்டாயானால், இங்கே இரண்டு மூன்று தினங்கள் எப்படியிருப்பாய்?" என்றான் ரவிதாஸன்.

"நான் ஒன்றும் பயப்படவில்லை நீ போன பிறகு வீண்பிராந்திக்கு உள்ளாவதைக் காட்டிலும் நீ இருக்கும்போதே கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த நிலவறைக்குள் புகுந்தவர்கள் சிலர் இங்கேயே செத்துப் போனார்கள் என்று சொன்னாயல்லவா?" என்றான் சோமன் சாம்பவன்.

"ஆமாம் அவர்களுடைய ஆவிகள் இங்கேயே உலாவிக் கொண்டுதானிருக்கும். அதனால் என்ன? பேய்கள் தான் நம்மைக் கண்டு பயந்து அலறுமே? அந்தச் சிறு பையன் வந்தியத்தேவன் இந்த நிலவறையில் பயப்படாமல் இருந்து எப்படியோ தப்பி வெளியேறியிருக்கிறான். எத்தனையோ பேய் பிசாசுகளைப் பார்த்த நானும் நீயும் ஏன் பயப்பட வேண்டும்?"

"பேயும் பிசாசும் இருக்கட்டும், அதற்கெல்லாம் யார் பயப்படுகிறார்கள். வேறு பிராணிகள், விஷ ஜந்துகள் இங்கே இருக்கலாம் அல்லவா?"

"பாம்புக்கும் தேளுக்கும் பயப்படப் போகிறாயா? நம்மைக் கண்டாலே அவைகள் வளைகளில் போய் ஒளிந்துக் கொள்ளும்"


"இருந்தாலும் இரண்டு மூன்று நாட்கள் இங்கேயே இருக்கிறது என்றால் யோசனையாகத்தான் இருக்கிறது, ரவிதாஸா! அதற்கு முன்னாலேயே ஒருவேளை சந்தர்ப்பம் கிடைத்தால்?"

"வேண்டாம், வேண்டாம்! அந்தத் தவறு மட்டும் செய்து விடாதே! இன்றைக்குச் செவ்வாய்க் கிழமை புதன், வியாழன், இரண்டு நாளும் நீ காத்திருக்க வேண்டும்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## குறும்பு



பாடசாலை நடந்து கொண்டிருந்தது. ஐந்தாம் வகுப்பு ஆசிரியை பத்மாவதி கரும்பலகை போர்ட்டில் சோக் பீசினால் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார். கடைசி பெஞ்சில் உட்கார்ந்திருந்த பாலனும் பாபுவும் ஒருவருக்கொருவர் எதைப் பற்றியோ பேசிக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று எழுந்து நின்று ஒருவருக்கொருவர் சிலேட்டால் அடித்துக் கொண்டார்கள். "டீச்சர்... டீச்சர்... இங்க பாருங்க. பாலனுக்கும், பாபுவுக்கும் சண்டை நடக்குது..." என்று மற்ற மாணவர்கள் ஒன்றாகக் குரல் கொடுத்தார்கள். பிளாக் போர்ட்டில் எழுதுவதை நிறுத்திவிட்டுத் திரும்பினார் பத்மாவதி. அவருக்கு கோபம் வந்து விட்டது. "பாபு, பாலன் இரண்டு பேரும் இங்க வாங்க..." இருவரும் பயந்து நடுங்கியவாறு டீச்சர் முன்னால் வந்து நின்றார்கள்."

"உங்களுக்குள்ள என்ன சண்டை. உண்மையைச் சொல்லுங்கள்..." "டீச்சர்... டீச்சர்... எங்க அப்பா எனக்கு ஒரு புது பென்சில் வாங்கிக் கொடுத்தார். அதை எங்க அம்மா நல்லா சீவி கொடுத்தார். அந்தப் பென்சிலை நான் பாலனிடம் காட்டினேன். அவன் உடனே, "இது என்னுடைய பென்சில்"என்று சொல்லிப் பிடுங்கிக் கொண்டான். எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கவில்லை. கொடுக்க மாட்டேன் என்று சொல்லி விட்டு, சிலேட்டால் என்னை அடித்தான். நானும் திருப்பி அடித்தேன்" என்றான் பாபு. அவன் கண்கள் கலங்கியிருந்தன. சிறிது நேரம் யோசித்த பத்மாவதி டீச்சர், "நீ என்னப்பா சொல்கிறாய் என்று பாலனைப் பார்த்துக் கேட்டார்." டீச்சர். பாபு சொல்வது அத்தனையும் பொய். இந்தப் பென்சிலை எனக்கு எங்க அப்பா தான் வாங்கிக் கொடுத்தார். அவரே பிளேடால சீவியும் கொடுத்தாரு. நான் பாபுவிடம் புது பென்சிலைக் காட்டினேன். உடனே அவன், இது என்னோட பென்சில், என்னிடம் கொடுத்துவிடு என்று சண்டைபோட ஆரம்பித்து விட்டான். எல்லாவற்றையும் சொல்லி விட்டு மீண்டும் பாபுவை குரூரமாகப் பார்த்தான் பாலன்.

மீண்டும் சிந்தனையில் மூழ்கினார் டீச்சர். "சரி... அந்தப் பென்சிலை என்னிடம் கொடுங்கள். பாலன் பென்சிலை டீச்சர் பத்மாவதியிடம் கொடுத்தான்." சரி... பாலன் நீ முன் வரிசையில் உட்காரு. பாபு நீ கடைசி வரிசையில் போய் உட்காரு. பென்சில் யாருடையது என்று நான் கண்டு பிடிக்கிறேன். அதுவரைக்கும் இரண்டு பேரும் அமைதியாக இருக்க வேண்டும். நான் சொல்வதைக் கேட்கவில்லை என்றால் அடி விழும். புரிகிறதா..?" தொடர்ந்து பத்மாவதி டீச்சர் பிளாக் போர்ட்டில் எழுதி முடித்தார். எல்லோரும் கவனியுங்கள். பிளாக் போர்ட்டிலே இரண்டு கணக்கு எழுதியிருக்கிறேன். அதை அப்படியே உங்க சிலேட்டிலே எழுதி அதற்கான விடையையும் தெளிவா எழுத வேண்டும்..." என்று சொல்லிவிட்டுத் தன் இருக்கையில் அமர்ந்தார் டீச்சர். மாணவர்கள் எழுதத் துவங்கினர். பத்மாவதி டீச்சர் வருகைப் பதிவேட்டை சரிபார்த்து வைத்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணிய நெஞ்சம் வேண்டும்.
தெளிந்த நல்லறிவு வேண்டும். - பாரதியார்

வலம்புரி

TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பெண்ணின் கொலைக்கு எதிராக பொது அமைப்புகள் குரல் தர வேண்டும்

காரைநகரைச் சேர்ந்த குடும்பப் பெண் திருமதி சுரேஸ்குமார் குலதீபா கொலை செய்யப்பட்டு அவர் அணிந்திருந்த தங்க நகைகள் களவாடப்பட்ட சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதிலும் பிரஸ்தாபப் பெண் சித்திரவதை செய்யப்பட்டு, நீரில் மூழ்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டதான மருத்துவ அறிக்கைகள் மனிதநேயமுள்ளவர்களின் குருதியை உறைய வைப்பதாகும்.

ஆம், உறவினரின் திருமண நிகழ்வுக்காக காரைநகரில் இருந்து வவுனியாவுக்குச் செல்வதற்குப் புறப்பட்ட அந்த அப்பாவிப் பெண்ணுக்கு நடந்த கொடுமையைப் பொது அமைப்புகளும் பெண்கள் சார்ந்த நிறுவனங்களும் வன்மையாகக் கண்டிப்பதுடன் கொல்லப்பட்ட அந்தப் பெண்ணுக்கு நீதி கிடைக்க வேண்டி ஜனநாயக வழிப் போராட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

எனினும் குறித்த பெண் கொல்லப்பட்டமை குறித்து மாதர் அமைப்புகள் அமைதி காப்பது தான் விசித்திரமாக உள்ளது.

ஆம், ஒரு திருமண நிகழ்வுக்குச் சென்ற பிரஸ்தாபப் பெண் திட்டமிடப்பட்டு கொல்லப்பட்டுள்ளார் என்பது தெரிகிறது.

கொலை செய்தவர்களின் நோக்கம் அவர் அணிந்திருந்த தங்க நகைகளைக் கபளீகரம் செய்வதென்பதும் தெளிவாகிறது.

தவிர, குறித்த பெண் மிக மோசமாகச் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளதுடன் அங்க அடையாளங்களை மறைப்புச் செய்யும் நோக்கில்; அவரது உடலில் அசிற் போன்ற திரவம் ஊற்றப்பட்டுள்ளமையும் மருத்துவ பரிசோதனை மூலம் உறுதி செய்யப்படுகிறது.

அப்படியானால், குறித்த கொலையை ஒருவர், இருவர் செய்திருக்க முடியாது. இதற்குப் பின்னால் ஒரு குழு இயங்கியுள்ளது. அதாவது இக்கொலை திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளமை உறுதியாகிறது.

இரண்டு குழந்தைகளின் தாய் ஒருவர் இவ்வாறு கொல்லப்பட்டமை குறித்து பொது அமைப்புகள் மௌனம் சாதிக்கலாகாது.

ஆம், மாணவி வித்தியாவின் கொலைக்கு எதிராக நம் மக்கள் திரண்டெழுந்து நடத்திய போராட்டம் காரணமாக குற்றவாளிகளுக்கு விரைந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

தவிர, மாணவி வித்தியாவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களும் விசாரிக்கப்பட்டனர்.

அன்று மாணவி வித்தியாவுக்காக எம் மக்கள் நீதி கோரி நடத்திய போராட்டம், நீண்ட காலம் எம்மண்ணில் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்திருந்தது என்ற உண்மையை நாம் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

ஆகவே யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த ஓர் அப்பாவிப் பெண்ணுக்கு நடந்த கொடூரத்தை – கொடுமையைக் கண்டித்து பொது நிறுவனங்களும் பெண்கள் அமைப்புகளும் குரல் கொடுக்க வேண்டும். வீதியில் இறங்கி, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு போர்க்கொடி தூக்க வேண்டும்.

எனினும் இதுவிடயத்தில் பெண்கள் அமைப்புகள் அமைதியாக இருப்பது ஆச்சரியமாக உள்ளது. **உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு** என்ற தத்துவம் வடக்கிலுள்ள பெண்கள் அமைப்புக்கும் பொருந்துமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**எனவே குறித்த பெண்ணின் கொலைக்கு எதிராக, பெண் சட்டத்தரணிகள் தாமாக முன்வந்து நீதியைப் பெற்றுத்தர வேண்டும். நீங்கள் பெற்றுத் தரும் நீதி பெண்களின் பாதுகாப்பை மென்மேலும் வீரியப்படுத்தும் என்பது நிச்சயமான உண்மை.**

# யாழ்.நகர நெருசலை சீராக்க முடிவு

## நெடுந்தூரம் - புதிய பேருந்து நிலையம்
## குறுந்தூரம் - பழைய பேருந்து நிலையம்

### நேற்றைய கூட்டத்தில் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரம் நெரிசல் மிக்கதாகவும் நெருக்கடி மிக்கதாகவும் மாறியுள்ளது. அவற்றை ஒழுங்கமைக்க சீரமைக்க வேண்டியதேவை, பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. அதற்கு அமைவாக நெடுந்தூர, குறுந்தூர பேருந்துச் சேவைகள் புதிய மற்றும் பழைய பேருந்து நிலையங்களிலிருந்து இயக்கப்படவேண்டியுள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் புதிய பேருந்து நிலையத்தின் இயங்குநிலை தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று (14) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன், கூட்டத்தின் நோக்கம் தொடர்பில் தெளிவுபடுத்தினார். இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுநர் யாழ்.நகரத்தில் பேருந்து நிலையம், மருத்துவமனை, வர்த்தக நிலையங்கள் என்பன அமைந்துள்ளன. இதனால் யாழ். நகரின் எதிர்கால அபிவிருத்தி நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

ஏனைய மாவட்டங்களிலுள்ள நகரத்தைப் போன்று எமது நகரைத்தையும் மாற்றுவதற்கு ஒத்துழைக்கவேண்டும். நகரத்தின் போக்குவரத்து நெரிசலை குறைக்க வேண்டும் என்ற எண்ணம் அனைவரிடமும் உள்ளது. எனவே அதை நோக்கியதாக பேருந்து நிலையத்தின் செயற்பாடுகளை நாம் ஒழுங்குபடுத்த வேண்டும் என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினரும் போக்குவரத்து தொடர்பான செயற்குழுவின் தலைவருமான க.இளங்குமரன், பொதுப்போக்குவரத்தை மக்களின் தேவைக்கானதாக மாற்றுவதே அரசாங்கத்தின் இலக்கு. தனியார்மற்றும்இலங்கை போக்குவரத்துச் சபை என்பன இணைந்து செயற்பட வேண்டும்.

அதனடிப்படையிலேயே யாழ். மாவட்டத்திலும் சேவைகள் நடைபெறவேண்டும் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

இதன்பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், யாழ்.நகரப் பகுதியிலிருந்து பேருந்து நிலையம் அகற்றப்பட வேண்டும் என்பதே நிபுணர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் கருத்தாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

இதேவேளை யாழ். நகரத்தின் இயங்குநிலை என்பது பேருந்து நிலையத்தின் செயற்பாட்டில் தங்கியுள்ளது. குறுந்தூர சேவைகளை இரு தரப்பும்தற்போதுள்ள பேருந்து நிலையத்திலிருந்தும் நெடுந்தூர சேவைகளை புதிய பேருந்து நிலையத்திலிருந்தும் இரு தரப்பும் முன்னெடுப்பதன் ஊடாக நகரத்தின் நெரிசல் குறைவடையும்என யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன் வலியுறுத்தினார்.

இலங்கை போக்குவரத்துச்சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் கே.கேதீசன், பேருந்து நிலையத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட 63 கடைகளிலிருந்தும் நாளொன்றுக்குத் தலா 500 ரூபா வீதம் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவரின் அனுமதியுடன் அறவிடப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

தூய்மை இலங்கை செயற்றிட்டத்தின் கீழ் இந்தப் பேருந்து நிலையத்தை புனரமைக்கும் போது அந்தக் கடைகள் அகற்றப்படும் என பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

புதிய பேருந்து நிலையத்துக்குச் செல்வது தொடர்பில் தொழிற்சங்களை அழைத்துக் கலந்துரையாட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை புதிய பேருந்து நிலையத்தை இயங்கச் செய்வது தொடர்பில் முதலில் கள ஆய்வை மேற்கொள்வது என நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ந-7)

## கீரிச்சம்பாவுக்கு மாற்றீடாக பொன்னிச் சம்பா இறக்குமதி

உள்நாட்டுச் சந்தையில் நிலவும் கீரிச் சம்பா அரிசித் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு அதற்குப் பதிலீடாகக் கருதப்படும் GR/11 ரக பொன்னிச் சம்பா அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த இறக்குமதி அனுமதி இன்று (15) முதல் ஒரு மாதத்துக்கு (நவம்பர் 15 வரை) நடைமுறையில் இருக்கும்.

ஒரு இறக்குமதியாளர் அதிகபட்சமாக 520 மெட்ரிக் தொன்களை மட்டுமே இறக்குமதி செய்ய முடியும் என்ற உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இக் காலப்பகுதியில் இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் கீரிச் சம்பா அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுவதுடன் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அது விற்பனை செய்யப்படுவதைக் கருத்திற் கொண்டு உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஐஸ் போதையுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

தெஹிவளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விலியம் சந்திக்கு அருகில் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கொழும்பு மாவட்ட பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மாவட்ட பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பூஸா பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடையவர் ஆவார் எனவும் சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ 95 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை கொழும்பு மாவட்ட பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பாடசாலைக்கு அருகில் தோட்டாக்கள் மீட்பு

(தலாவ)

தலாவ, முதுனேகம மகா வித்தியாலயத்திற்கு அருகில் நேற்று (14) அதிகாலை ஒரு தொகை வெடிமருந்துகள் மற்றும் வெற்றுத் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட தோட்டாக்கள் T-56 ரகத் துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படுபவை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புத்தேகம பொலிஸ் அதிகாரிகளால் இந்த வெடிமருந்துகள் மற்றும் தோட்டாக்கள் என்பவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தற்போது பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல்
# மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
## நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2026

மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் சார்பில் யாழ் மாவட்ட செயலக திணைக்களப் பெறுகைக் குழுவினால் யாழ் மாவட்ட செயலகம், மற்றும் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2026 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்கும், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் வடபிராந்தியத்திலுள்ள நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக பெறுகை அலகு (அறை இல: 42), மற்றும் பிரதேச செயலகங்களில் **2025-10-15** ஆம் திகதி தொடக்கம் **2025-11-28** ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் அல்லது **www.jaffna.dist.gov.lk** என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **2025-11-28** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2026"** எனக் குறிப்பிட்டு **"அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் (அறை இல:42) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும், விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கமையவும், ஏனைய வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்கு ரூபா **500/=** இனையும் **மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக** "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலங்கை வங்கி கணக்கிலக்கத்திற்கு வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக் கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டையை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்களும் **2025-11-28** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| ஒப்பந்த தொகை | பதிவுக் கட்டணம். |
|---|---|
| ரூபா 4,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 4,000,000க்கு அதிகமானதும் ரூபா 10,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 3,000 |
| ரூபா 10,000,000க்கு அதிகமானதும் ரூபா 20,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 5,000 |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

**பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளின் தொகுதி விபரம்**

**பொருட்கள்**

- கட்டிட நிர்மாண மற்றும் திருத்த வேலைகளுக்கான மூலப்பொருட்கள்.
- கணினிகள், அச்சிடும் உபகரணங்கள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்.
- அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள்
- பிளாஸ்ரிக் பெயர் பலகைகள், மற்றும் அலுவலக அடையாள அட்டைகள்.
- இலத்திரனியல் மின்சாரப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்கள்.
- இயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்களும்.
- வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல்.
- விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள்.
- காலை, மதிய, இரவு, உணவு மற்றும் சிற்றுண்டி வகைகள்.
- உலர் உணவு மற்றும் சுத்திகரிப்பு பொருட்கள்.
- காகிதாதிகள், எழுதுகருவிகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள், அழகு சாதனப் பொருட்கள், பிளாஸ்ரிக், தோல் உற்பத்திகள் மற்றும் சமையல் உபகரணங்கள்.
- துணி வகைகள் வழங்குதல்.
- தளபாடங்கள் மற்றும் சேவைகள்.
- விவசாயப் பொருட்கள். கருவிகள் மற்றும் உபகரணங்கள்.
- மீன் பிடி உபகரணங்கள் மற்றும் சேவைகள்.
- மருத்துவ உபகரணங்கள் மற்றும் சேவைகள்.
- சூரிய மின்கலம், உதிரிப்பாகங்கள் மற்றும் திருத்தங்கள்.
- நீர் சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள்.

**வேலைகள்**

- கட்டிடங்கள்.
- வீதிகள்
- பாலங்கள்

**சேவைகள்**

- சுத்திகரிப்பு சேவை.
- பாதுகாப்பு சேவை.
- குளிரூட்டிகள், வளிபதனாக்கிகள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்.
- போட்டோ பிரதி இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்.
- வாகன சுத்திகரிப்பு சேவை.
- வாகனம் திருத்துதல் மற்றும் பராமரித்தல்.
- கணினி இயந்திரங்கள், கணினி அச்சியந்திரங்கள், கணினி வலையமைப்பு முறைமை, உள்ளக தொலைபேசி அமைப்பு, CCTV திருத்துதல் மற்றும் பராமரித்தல்.
- பந்தல் மற்றும் அலங்காரம், ஒலி, ஒளி சேவை.
- படப்பிடிப்பு சேவை.
- வாடகைக்கு மற்றும் குத்தகைக்கு வாகனம் வழங்கல்.
- இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்.
- வாகனங்கள் தளபாடங்களுக்கான குசன் வேலைகள், தளவிரிப்புக்கள் மற்றும் தொடர்புடைய உள்ளக வேலைகள்
- உலர் சலவை மற்றும் இஸ்திரி தொடர்பான சேவைகள்.
- இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்.
- தளபாடங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்.
- ஏனைய சேவைகள்.

**தலைவர்.**
**திணைக்களப் பெறுகைக்குழு**
**மாவட்ட செயலாளருக்காக,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(c-4108)

# கையெழுத்து சஞ்சிகைகள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ஊரெழு கணேச வித்தியாசாலையின் கையெழுத்துச் சஞ்சிகைகள் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலையின் அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற நூலகர் க. சௌந்தரராஜன் கலந்து கொள்ளவுள்ளார்.

குறித்த நிகழ்வில்வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மாணவர்களால் ஆக்கப்பட்ட சஞ்சிகைகளும் வெளியிடப்படவுள்ளன. (8)

# முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்தவிற்குப் பிணை

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் (ஓய்வு) நிஷாந்த உலுகேதென்னவை பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்றுக் காலை விசாரணைக்கு வந்த



போது, சமர்ப்பணங்களை பரிசீலித்த குருநாகல் நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதியான அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, கடத்தல் மற்றும் கொலை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்காக 2025 ஜூலையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தரம் 6 மாணவர் அனுமதி புதிய சுற்றுநிருபம் வெளியீடு

(கொழும்பு)

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களைத் தரம் 6 இற்கு அனுமதிப்பது தொடர்பான புதிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினூடாக இந்தச் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு, மாணவர்கள் தரம் 6 இற்கு அனுமதி பெறத் தேவையான அனைத்து நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் இந்தச் சுற்றுநிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் இலக்கம் 31/2025 கொண்ட இந்தச் சுற்றுநிருபத்தை, கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளமான www.moe.gov.lk இற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஆசிரியர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யா/ஊரெழு கணேச வித்தியாசாலை ஆசிரியர் தின விழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர் து.ஜெயதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் சி.குலேந்திரராஜா, சிறப்பு விருந்தினர்களாக யா/ஊரெழு கணேச வித்தியாசாலையின் ஓய்வுநிலை ஆசிரியைகளான திருமதி. சாரதாதேவி ரவிச்சந்திரன், செல்வி.இராஜமனோகரி தம்பிமுத்து மற்றும் செல்வி.குணநாயகி மார்க்கண்டு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி..

காரியாக மனோகரன் கோணேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பாலித செனவிரட்ன அண்மையில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தின் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த நிலையில் அந்த வெற்றிடத்திற்கு கோணேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 35 வருட கால பொலிஸ் சேவையை பூர்த்தி செய்ததுடன் தொடர்ச்சியாக கடந்த 11 வருடங்கள் நீர்கொழும்பு நகர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்திருந்த நிலையில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7,30)

## கிளிநொச்சியில்...

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த காணியில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டபோது வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று இருப்பது அவதானிக்கப்பட்டது.

அதனையடுத்து தருமபுரம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தருமபுரம் பொலிஸார் கைக்குண்டை மீட்டுள்ளனர்.

கிளிநொச்சி நீதிமன்ற அனுமதியுடன் கைக்குண்டினைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ந-7)

## கணேமுல்ல...

2025 பெப்ரவரி 19ஆம் திகதி கணேமுல்ல சஞ்சீவ புதுக்கடை இலக்கம் 05 நீதவான் நீதிமன்றத்திற்குள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். 25 வயதான பிங்குர தேவகே இஷாரா செவ்வந்தி இந்தக் கொலையில் உதவியாகவும் உடந்தையாகவும் செயற்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

இவர் துப்பாக்கிச் சூடு நடத்திய நபரை வழிநடத்தியதாகவும் திட்டமிட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச் சூடு நடந்த நாளிலிருந்து இவர் தலைமறைவாக இருந்த நிலையில் அவர் இருக்கும் இடம் குறித்து சரியான தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை என்று பொலிஸ் தெரிவித்திருந்தது. இந்நிலையில், நேற்று நேபாளப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த இஷார செவ்வந்தி, நேபாளத்தில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில் அவருடன் சேர்த்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பதியினரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் இன்று நாட்டிற்கு அழைத்து வரப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் துறை, மேற்கு மாகாணக் குற்றப் பிரிவு மற்றும் நேபாள பாதுகாப்புப் படையினர் நடத்திய சிறப்புக் கூட்டு நடவடிக்கையில் இஷாரா செவ்வந்தி உட்பட ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

தலைநகர் காத்மாண்டுவிலிருந்து சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பகுதியில் வைத்து இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் கம்பஹா மற்றும் நுகேகொடையைச் சேர்ந்த இருவர் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பதியினர் அடங்குவர். (ந-7)

## பல மாத...

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கணேமுல்ல சஞ்சீவ" என்பவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாக இருந்த நிலையில் நேபாளத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இக்கைது நடவடிக்கையானது பல மாத காலமாகத் திட்டமிடப்பட்டதாகும். இந்தக் கைது நடவடிக்கைக்கு நேபாள அரசாங்கமும் சர்வதேசப் பொலிஸாரும் ஒத்தழைப்பு வழங்கியிருந்தனர்.

வெளிநாடுகளில் உள்ள பாதாள உலகக் கும்பலைக் கைது செய்ய சர்வதேச பொலிஸார் தொடர்ந்தும் எமக்கு உதவி செய்து வருகின்றனர்.

இஷாரா செவ்வந்தியுடன்மேலும் ஒரு பெண்ணும் 4 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டவர்களை நாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு.வுட்லர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## வெளி...

பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து யாழ்ப்பாண மாவட்ட நிதிசார் குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய வேளை அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ந-7,104)

## முன்...

இந்நிலையில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் தான் கைது

தடுத்து முன்பிணை வழங்குமாறு கோரி மனுஷ நாணயக்காரவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவைக் கொழும்பு பிரதான நீதவான் அசங்க அஸ். போதரகம நேற்று நிராகரித்தார்.

இவ்வாறான சூழ்நிலையில் கடந்த கால அரசாங்கத்தில் விவசாய வேலைகளுக்கான இஸ்ரேலுக்குத் தொழிலாளர்களை அனுப்பியதில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து வாக்குமூலம் அளிப்பதற்காக முன்னிலையாகவுள்ள முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவைக் கைது செய்யப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.10.14
சீட்டிழுப்பு இலக்கம் 5982
B 6 6 9 9 3 2
அத சம்பத B 9 9 3 2
சீட்டிழுப்பு இலக்கம் 0557

சுப தவசக்
திகதி 2025.10.14
சீட்டிழுப்பு இலக்கம் 0098
கன்னி 04 10 21 24

தன நிதானய
திகதி -2025.10.14
சீட்டிழுப்பு இலக்கம் - 2012
A 36 45 46 54 A

மெகா பவர்
திகதி 14/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2330
D 21 13 14 48 70

ஜய
திகதி 2025.10.14
சீட்டிழுப்பு இலக்கம் 0250
F 4 7 0 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4224
சீட்டிழுப்பு திகதி 14.10.2025
H 01 49 56 59
H

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.14
சீட்டிழுப்பு இலக்கம் 1291
விருச்சிகம் 01 07 34 62 விருச்சிகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
14.10.2025
சீட்டிழுப்பு வாரம் 0690
T 1 7 5 7 2 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,389,762.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2956
சீட்டிழுப்பு திகதி 2025.10.14 தினம் செவ்வாய்க்கிழமை
20 33 45 77 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,210,919.20

சனிதா
திகதி 14.10.2025 வெற்றி வாரம் 5117
08 35 45 61 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,120,412.00

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 0791
சீட்டிழுப்பு திகதி 14.10.2025
செவ்வாய்க்கிழமை
20 31 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4668
சீட்டிழுப்பு திகதி 14.10.2025 தினம் செவ்வாய்க்கிழமை
11 17 29 58 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,643,867.20

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 16 06 09 32 71
சீட்டிழுப்பு வாரம் 2132
14.10.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.600,159,858.60

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2782
சீட்டிழுப்பு திகதி : 2025.10.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,032,716.80
06 29 47 62 A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 22 - 05 - 1958 | உதிர்வு 14 - 10 - 2025



## சிவராசா செல்வராணி

மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா செல்வராணி அவர்கள் நேற்று (14.10.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சின்னையா - காசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் ஜெயலட்சுமி (ஓய்வு நிலை ஆசிரியை - மு/இருட்டுமடு அ.த.க. பாடசாலை), வளர்மதி (சுவிஸ்), ஷேதீஸ்வரன் (லண்டன்), விவேகானந்தி (பிரான்ஸ்), விவேகானந்தன் (பிரான்ஸ்), ஆதித்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீபிரியா, நந்தகோபன் (லண்டன்), பானுகோபன் (பிரான்ஸ்), வேணுகோபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வகுமார், ஜனனி, எலோஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தேவரஞ்சிதம், கிருஷ்ணகுமார், தெய்வேந்திரன் (சுவிஸ்), புஸ்பலதா (லண்டன்), விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), சுந்தரமலர் (பிரான்ஸ்), மதிஷா (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், சிவபாலு மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் தேஜா, அக்சரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சாவகச்சேரி வடக்கு, மீசாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (16.10.2025) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


சாவகச்சேரி வடக்கு,
மீசாலை. (C-4114)

Paki : 0033 7694 14518
Kopi : 0044 7872 8394 88

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு 1950 - 10 - 07 | உதிர்வு 2025 - 10 - 14



## முத்தையா மகேந்திரராஜா (மாணிக்கம்)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற இ.போ.ச. அலுவலக உத்தியோகத்தர் முத்தையா மகேந்திரராஜா அவர்கள் நேற்று (14.10.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - மீனாட்சி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும் மனோகராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகசபை - பரமேஸ்வரி தம்பதியினரின் மருமகனும் சஞ்ஜீவன், நதீசன், கௌதமன், கௌசலன், பிருந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் மயூரதி, லாவண்யா, கம்சணன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான திசைநாயகம், தியாகராஜா, சோதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் லேமினி, லிவினிகா, சயன், சயானா, அக்ஷை, இஷானா, றியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஜெயந்தகுமார், ஜெயந்தராணி, சரோஜாராணி பிரதீப்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2025) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (5659)

தகவல்:
குடும்பத்தினர்

## கோப்பாய்...

கையளிக்குமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். எனினும், அதற்குப் பலன்கிட்டவில்லை.

இந்த நிலையில், 2019ஆம் ஆண்டு, காணிகளுக்குச் சொந்தமான 9 உரிமையாளர்கள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு கடந்த 6 ஆண்டுகளாக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த நிலையில், கடந்த யூன் மாதம் 27ஆம் திகதி வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

அதன்போது பொது மக்களின் காணியிலிருந்து வெளியேறி, அந்தக் காணியை உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டுமென மாவட்ட நீதிபதி சி.சதீஸ்கரன் உத்தரவிட்டார்.

எனினும், இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை பொலிஸார் காணியை உரிமையாளர்களிடம் கையளிக்கவில்லை.

இந் நிலையில், இன்று புதன்கிழமை நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற, நீதிமன்றப் பதிவாளர் கோப்பாய் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள பகுதிக்குச் சென்று, அங்குள்ள பொலிஸாரை வெளியேற்றி, காணியை உரிமையாளர்களிடம் கையளிக்கவுள்ளார்.

அதேவேளை கோப்பாய் பொலிஸ் நிலையத்தை உரும்பிராய் பகுதிக்கு மாற்றும் நடவடிக்கைகள் நடந்து வருகிறது. பகுதியளவில் இடமாற்ற நடவடிக்கைகள் முடிந்துள்ளன. எனினும், முழுமையான இடமாற்றம் நடந்து முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

## தமிழ்...

பிரதிநிதிகள் இன்று (15) சந்தித்துப் பேசவுள்ளனர்.

15 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள ரில்கோ ஹோட்டலில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில் பங்கேற்பதற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கு அழைப்புவிடுக்கப்படவில்லை. அதேவேளை முன்னாள் இணைந்த வட, கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாளும் இச்சந்திப்பில் கலந்துகொள்வார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தாம் ஆட்சிப்பீடமேறி ஒருவருடகாலத்துக்குள் மாகாணசபைத்தேர்தல்கள் நடாத்தப்படும் என அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உத்தரவாதம் அளித்திருந்தது. ஆனால் அவ்வாக்குறுதி இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையில், மாகாணசபைத்தேர்தல்கள் உடனடியாக நடாத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை நாடளாவிய ரீதியில் எழுந்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்த்தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் நடைபெறவிருக்கும் சந்திப்பில் மாகாணசபைத் தேர்தல்கள் உடனடியாக நடாத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், அதனை ஒன்றிணைந்து வலியுறுத்த வேண்டியதன் தேவைப்பாடு குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது.

அதுமாத்திரமன்றி இச்சந்திப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் முறையான அரசியல் தீர்வை உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பு உருவாக்கம் பற்றியும் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.மேலும் இன்றைய சந்திப்பில் அழைப்பு விடுக்கப்பட்ட சகல கட்சிக்ளினதும் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ள போதிலும், தமிழரசுக்கட்சியின் சார்பில் பிரதிநிதிகளின் பங்கேற்பு இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4112)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் 30,000/- 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-4111)
V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4111)
UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

யாழ்ப்பாணத்தில் Voyzant
கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்
◆ விமான பயணச்சீட்டுக்கள் ◆ பயணக் காப்புறுதி
◆ விசா சேவைகள் ◆ வெளிநாட்டு சுற்றுலா
மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(C-4109)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org